SIVARAJAVEL IAS ACADEMY
AN IDEAL INSTITUTE FOR CIVIL SERVICE EXAMS

# சங்கமம்

TNPSC க்கான மாதாந்திர நடப்பு நிகழ்வுகள் | ஆகஸ்ட் - 2023

## இந்திய சுதந்திர தினம்



# SIVARAJAVEL IAS ACADEMY

AN IDEAL INSTITUTE FOR CIVIL SERVICE EXAMS

TNPSC மற்றும் அனைத்துவிதமான அரசு போட்டித் தேர்விற்கு பயிற்சி பெறும் மாணவர்கள் பயன்படும் வகையில் சிறந்த ஆசிரியர்களை கொண்டு மாதம் தோறும் நடப்பு நிகழ்வுகள் எங்கள் Sivarajavel IAS Academy சார்பாக இலவசமாக வெளியிடப்படுகின்றது. இதனை இலவசமாக பதிவிறக்கம் செய்வதற்கு கீழ்க்கண்ட இணைய முகவரியில் இணையவும்

**Website: www.sivarajavelias.com**
**Facebook : https://www.facebook.com/Sivarajaveliasacademy**
**Instagram: https://www.instagram.com/sivarajavel_ias_academy**
**Telegram: https://t.me/sivarajavel_ias_academy**
**Twitter : https://twitter.com/sivarajavel_ias**

**Kindly share your feedback**

sivarajaveliasacademy@gmail.com

## HEAD OFFICE

No.97, AF Block, Shanthi Colony,
12th Main Road, Anna Nagar
West, Chennai – 600 040.
Ph: 9626364444, 9626369899

## BRANCHES

**TIRUNELVELI**

No.106B, 3rd Floor, Gilgal Complex,
VOC ground Opposite,
Trivandrum Road,
Palayamkottai – 627 002
Ph: 9626252500, 9626253300

**TRICHY**

No.143, 4th Floor,
Lakshmi Complex,
Salai Road,
Thillai Nagar, Trichy-620 018
Ph: 9751500300, 9786500300

# பொருளடக்கம்


| வ.எண் | பொருளடக்கம் | ப.எண் |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு செய்திகள் | 4 |
| 2. | தேசியச் செய்திகள் | 7 |
| 3. | சர்வதேச செய்திகள் | 14 |
| 4. | பொருளாதாரச் செய்திகள் | 17 |
| 5. | திட்டங்கள் | 19 |
| 6. | சுற்றுச்சூழல் செய்திகள் | 21 |
| 7. | இராணுவச் செய்திகள் | 22 |
| 8. | அறிவியல் / தொழில்நுட்பம் | 23 |
| 9. | விளையாட்டுச் செய்திகள் | 26 |
| 10. | விருதுகள் | 31 |
| 11. | நியமனம் | 34 |
| 12. | முக்கிய தினங்கள் | 35 |
| 13. | முக்கிய நபர்கள் | 41 |
| 14. | புத்தகங்கள் | 42 |
| 15. | TNPSC துணுக்குகள் | 43 |
| 16. | 2023 ஜூலை மாத வினா விடைகள் | 39 |
| | | |
| | | |
| | | |

## தமிழ்நாடு செய்திகள்

### முதல்வரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தில் 18 வயது நிரம்பிய குழந்தைகள் முதிர்வுத் தொகை பெற அழைப்பு

**செய்தி- முதல்வரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தில் பதிவு செய்துள்ள 18 வயது நிரம்பிய பெண் குழந்தைகள், முதிர்வுத் தொகையை பெற்றுக் கொள்ளுமாறு சமூக நலத்துறையின் ஆணையர் அழைப்பு விடுத்துள்ளார்.**

- 'முதல்வரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம்' பற்றிய குறிப்பு- தமிழக அரசின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் தமிழ்நாடு மின்விசை நிதி நிறுவனம் வாயிலாக 'முதல்வரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம்' செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் 2001 முதல் மார்ச் 2023 வரை 9 லட்சத்து 56 பெண் குழந்தைகள் பதிவு செய்துள்ளனர்.
- குடும்பத்தில் பிறந்த ஒரே ஒருபெண் குழந்தைக்கு ரூ.50 ஆயிரத்துக்கான நிலை வைப்புத்தொகையும், 2 பெண் குழந்தைகளுக்கு தலாரூ.25 ஆயிரத்துக்கான நிலைவைப்புத் தொகையும் குழந்தைகளின் பெயரில் முதலீடு செய்யப்படும். அதேபோல முதல் பிரசவத்தில் ஒரு பெண் குழந்தையும், 2-வது பிரசவத்தில் இரட்டை பெண் குழந்தைகள் என மொத்தம் 3 பெண் குழந்தைகள் இருந்தால், சிறப்பு அனுமதியின் பேரில் ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் தலா ரூ.25 ஆயிரம் முதலீடு செய்யப்படும்.
- இதில் பயன்பெற குடும்ப வருமானம் ஆண்டுக்கு ரூ.72 ஆயிரத்துக்குள் இருக்க வேண்டும். அதேநேரம் 2-வது பெண் குழந்தை பிறந்து 3 ஆண்டுக்குள் இதற்கு விண்ணப்பிக்க வேண்டும். பெற்றோர்களில் ஒருவர் 40 வயதுக்குள் குடும்ப கட்டுப்பாடு செய்திருக்க வேண்டும். மேலும் பெண் குழந்தைகள் 10-ம் வகுப்பு எழுதி, 18 வயது வரை குழந்தை திருமணம் புரியாமல், இருக்கும் நிலையில் அவர்களுக்கு வட்டியுடன் கூடிய வைப்புத்தொகை, முதிர்வுத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

### தமிழக ஆதிச்சநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த சர்வதேச அருங்காட்சியகத்துக்கு மத்திய நிதியமைச்சர் அடிக்கல் நாட்டியுள்ளார்.

- தமிழகத்தில் தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் அருகே உள்ள ஆதிச்சநல்லூர் எனும் பகுதியில் உலகத்தரம் வாய்ந்த சர்வதேச அருங்காட்சியகத்துக்கு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அடிக்கல் நாட்டியுள்ளார்.
- இந்த ASI யின் அருங்காட்சியகமானது ஆதிச்சநல்லூரில் உள்ள ஆன்-சைட் அருங்காட்சியகத்திலிருந்து கிட்டத்தட்ட ஒரு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளதாகும். இந்தியா முழுவதும் உலகத் தரம் வாய்ந்த சர்வதேச அருங்காட்சியகங்களை நிறுவுவதன் மூலம் நாட்டின் சுற்றுலாத்துறைக்கு புத்துயிர் அளிப்பதற்காக 2020 பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட மத்திய அரசாங்கத்தின் முயற்சியின் ஒரு முக்கிய பகுதியாக ஆதிச்சநல்லூரில் உள்ள அருங்காட்சியகம் அமைந்துள்ளது என்பது குறிப்பித்தக்கதாகும்.



### இந்திரதனுஷ் (ஐஎம்ஐ) 5.0 நோய்த்தடுப்பு என்ற முன்னெடுப்பானது கோவை மாவட்டத்தில் தொடங்கியுள்ளது.

- ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு மிகவும் தீவிரப்படுத்தப்பட்ட பணியான இந்திரதனுஷ் (ஐஎம்ஐ) 5.0 என்ற நோய்த்தடுப்பு முன்னெடுப்பானது கோவை மாவட்டத்தில் தொடங்கியுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது வயது வந்தோருக்கான டெட்டனஸ் டிஃப்தீரியா(டிடி) என்பதன் தடுப்பூசியை எடுத்துக் கொள்ளாத கர்ப்பிணிப் பெண்களுக்கும் தேசிய நோய்த்தடுப்பு குறிப்பு அட்டவணையில் தடுப்பூசிகளை தவறவிட்ட ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் மருத்துவ உதவிகளை வழங்குவதை நோக்கமாக கொண்டு இந்த முன்னெடுப்பானது தொடங்கப்பட்டுள்ளது.

### தமிழகத்தில் 4,000 மெகாவாட் அளவுள்ள புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டம் தொடங்கப்பட உள்ளது.

- தமிழக மாநிலத்தில் கிட்டத்தட்ட 4000

மொகாவாட் திறன் கொண்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின்நிலையங்களை அமைக்கப்பட உள்ளதாக பாராளுமன்றத்தில் மத்திய மின்சக்தி மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் ஸ்ரீ ஆர்.கே.சிங் தெரிவித்துள்ளார்.

- இந்த முன்னெடுப்பு திட்டத்திற்கு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகமானது ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் இந்த திட்டமானது தமிழ்நாடு டிரான்ஸ்மிஷன் கார்ப்பரேஷன் அமைப்பால் (TANTRANSCO) செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கீழடியில் நடைபெற்று வரும் சமீபத்திய அகழாய்வில் பழங்கால எடை கல்லானது ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

- சிவகங்கை மாவட்டத்தின் கீழடியில் தற்போது நடைபெற்று வரும் 9 ஆம் கட்ட அகழாய்வுப் பணி மேற்கொள்ளும்போது அதில் குறிப்பிடத்தக்க பழங்கால எடைக் கல்லானது ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- இது அகழாய்வு மேற்கொள்ளும்போது கிட்டத்தட்ட 175 செ.மீ. ஆழத்தில் XM19/3 என்ற அகழாய்வுக் குழியிலிருந்து படிக கல்லால் செய்யப்பட்ட இந்த எடை கல்லானது கண்டெடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- இந்திய குடியரசுத் தலைவர் 'உணர்வு வளர்ச்சியின் நகரத்தில் மிகச்சிறந்த திறமைக்காக ஆசைப்படுதல்' என்ற மாநாட்டைத் தொடங்கி வைத்துள்ளார்.

## இந்திய குடியரசுத் தலைவர், விழுப்புரத்தில் ஆரோவில்லில் 'உணர்வு வளர்ச்சியின் நகரத்தில் மிகச்சிறந்த திறமைக்காக ஆசைப்படுதல்' என்று தலைப்பிடப்பட்ட மாநாட்டைத் தொடங்கி வைத்துள்ளார்.



- ஒரு மனதின் ஆன்மீக மற்றும் சுயசார்பு விழிப்புணர்வின் மூலம் ஒரு பொதுவான உயிரினத்தைக் கூட உணர்வுள்ள மனிதனாக மாற்ற முடியும் என்றும் ஒரு கூற்றினைப் பற்றிய விழிப்புணர்வை உலக மக்கள் அனைவரும் அறிந்து அதன் பயனை உலக பொது வெளியில் கொண்டு செல்வதை நோக்கமாக கொண்டு இந்த மாநாடானது தொடங்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

## 2024 ஆம் ஆண்டிற்கான உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் அமைப்பு சின்னத்தை தமிழக முதல்வர் வெளியிட்டுள்ளார்.

- தமிழகத்தின் சென்னையில் 2024 ஆம் ஆண்டு நடைபெறக் கூடிய உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கான (GMI) அமைப்பின் சின்னத்தை(LOGO) தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ளார்.
- இந்த மாநாடானது 2024 ஆம் ஆண்டு ஜனவரி 7 மற்றும் 8 ஆம் நாட்களில் நடைப்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தா என்ற தமிழ் எழுத்தை மையமாக கொண்டு இந்த சின்னமானது வடிவமைக்கப்பட்டுள்ளது என தமிழக அரசு அறிவித்துள்ளது. சர்வதேச நாடுகளின் தொழில்முனைவு முதலீட்டாளர்களை மாநிலத்தில் முதலீடு செய்ய ஈர்க்கும் வண்ணம் இந்த மாநாடானது நடைபெற உள்ளது.

## 20 அடி உயரத்தில் முற்றிலும் தமிழ் எழுத்துக்களால் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலையானது கோவையில் நிறுவப்பட்டுள்ளது.



- ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ், தமிழகத்தின் கோயம்பத்தூரில் உள்ள குறிச்சி குளத்தில் சுற்றுலாவை மேம்படுத்தும் ஒரு பகுதியாக, புகழ்பெற்ற தமிழ் தத்துவஞானியான திருவள்ளுவரின் 20 அடி உயர சிலையை கோவை மாநகராட்சி இல் நிறுவியுள்ளது.
- முழுவதும் எஃகு கலவையால் வடிவமைக்கப்பட்ட இந்த சிலையானது அவர் எழுதிய 1,330 குறள்களைக் குறிக்கும் வகையில், அங்கு 1,330 தமிழ் எழுத்துக்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட்டுள்ளதாகும். இதில் திருவள்ளுவரின் முதல் திருக்குறளான – 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு என்பது அச்சிலை வடிவமைக்கப்பட்ட

மேடையில் பொறிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## தமிழகத்தின் சிறந்த மாநகராட்சியாக திருச்சி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- திருச்சி மாநகராட்சியானது 2023 ஆம் ஆண்டிற்கான தமிழகத்தில் சிறப்பாக செயல்படும் மாநகராட்சியாக தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசு சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது. மேலும் இதற்கான விருதை மாண்பிமிகு மாநில முதல்வர் அவர்களின் சார்பில் திருச்சி மாநகராட்சியின் மேயர் அவர்களுக்கு வழங்கப்பட உள்ளதாகும்.
- மாநிலத்தில் சிறப்பாக செயல்படும் நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தின்போது மாண்பிமிகு தமிழக முதல்வர் அவர்களால் இந்த விருதுகளானது வழங்கப்படுவதாகும்

## விடியல் பயணத் திட்டம்

- தமிழகத்தின் பெண்களுக்கான கட்டணமில்லா பேருந்துப் பயண திட்டமானது இனி 'விடியல் பயணத் திட்டம் என்று அழைக்கப்படும் என மாநில முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- சுதந்திர தினத்தையொட்டி(ஆகஸ்ட் 15), சென்னை தலைமைச் செயலக வளாகத்தில் தேசியக் கொடி ஏற்றி வைத்த முதல்வர் அதன் பின், மகளிருக்கான பல்வேறு திட்டங்கள் தமிழகத்தில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன என்றும் அதில் பெண்களுக்கான கட்டணமில்லா பேருந்துப் பயண திட்டமானது இனி வரும் காலங்களில் விடியல் பயணத் திட்டம் என்று அழைக்கப்படும் என அறிவித்துள்ளார்.

## இந்தியாவின் முதல் ஆளில்லா விமான சோதனைக் கூடமானது தமிழகத்தில் அமைக்கப்பட உள்ளது.

- பாதுகாப்பு சோதனை உள்கட்டமைப்பு திட்டத்தின் (DTIS) கீழ் இந்தியாவின் முதல் ஆளில்லா வான்வழி அமைப்புகளுக்கான(Drone) பொது சோதனை மையமானது தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தால்(TIDCO) தமிழகத்தில் நிறுவப்படும் என தனது ஆகஸ்ட் மாத அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- வான்-விண்வெளி மற்றும் பாதுகாப்புத் துறை நிறுவனங்கள் தங்கள் இந்திய செயல்பாடுகளை அமைப்பதற்கு விருப்பமான இடமாக தமிழகத்தை இந்த மையமானது மாற்ற உதவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் ஸ்ரீபெரும்புதூர் அருகே வல்லம் வடகலில் உள்ள சிப்காட் தொழில் பூங்காவில் கிட்டத்தட்ட 2.3 ஏக்கர் பரப்பளவில் இந்த மையமானது அமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் யுபிஎஸ் தொழில்நுட்ப மையமானது சென்னையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.




- தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் மாநில தலைநகரமான சென்னையில் அமெரிக்க விநியோகச் சங்கிலி மேலாண்மை மற்றும் பன்னாட்டு கப்பல் நிறுவனமான யுனைடெட் பார்சல் சர்வீஸின்(யுபிஎஸ்) நாட்டின் முதல் தொழில்நுட்ப மையத்தைத் திறந்து வைத்துள்ளார்.
- திறப்பு விழாவில் பேசிய முதல்வர் ஸ்டாலின் இந்த நிறுவனங்கள் தமிழகத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையை காப்பாற்றுவேன் என்றும் இத்தகைய நிறுவங்கள் மூலம் மாநில பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான வழிமுறைகளை மேற்கொள்வேன் என்றும் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தின் தென் மாவட்டங்களில் சாகர் பரிக்ரமா திட்டத்தின் VIII ஆம் கட்டமானது தொடங்க திட்டம்.




- தமிழகத்தில் ஆகஸ்ட் 31ஆம் தேதி மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் ஸ்ரீ பர்ஷோத்தம் ரூபாலா மற்றும் மாநில அமைச்சர் டாக்டர் எல் முருகன் ஆகியோர் இணைந்து சாகர் பரிக்ரமா திட்டத்தின் 8 ஆம் கட்டத்தை தொடங்கி வைக்க உள்ளனர்.
- இந்த முன்னெடுப்பானது தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டத்தின் தேங்காப்பட்டணம் மீன்பிடித் துறைமுகத்தில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் தூத்துக்குடி, ராமநாதபுரம், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி உள்ளிட்ட தமிழகத்தின் நான்கு கடலோர மாவட்டங்களை உள்ளடக்கியதாக சாகர் பரிக்ரமாவின் இந்த முன்னெடுப்பானது இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## ULLAS: Nav Bharat Saksharta Karyakram" கைபேசி செயலி



- செய்தி- மத்திய அமைச்சர் "ULLAS: Nav Bharat Saksharta Karyakram" இன் கைபேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளார்.
- மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சரும் கல்வி அமைச்சருமான ஸ்ரீ தர்மேந்திர பிரதான், புதுதில்லியின் பிரகதி மைதானத்தில் உள்ள மாபெரும் பாரத் மண்டபத்தில் "உல்லாஸ்: நவ் பாரத் சக்ஷர்தா காரியக்ரம்" என்பதன் சின்னம் மற்றும் அதன் கைபேசி செயலியை தொடங்கி வைத்தார்
- உல்லாஸ், சமூகத்தில் உள்ள அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்றல் என்ற கருப்பொருளை கொண்ட இந்த முன்முயற்சியானது நாடு முழுவதும் கல்வி பற்றிய விழிப்புணர்வை ஒவ்வொரு தனிநபரையும் சென்றடையும் கற்றல் சூழலை வளர்ப்பதன் மூலம், நாட்டின் திறன் மேம்பாட்டை அதிகரிப்பதை நோக்கமாக கொண்டு இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## பாராளுமன்றத்தில் ஒளிப்பதிவு திருத்த மசோதாவானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

- ஒளிப்பதிவு திருத்த மசோதா 2023 ஆனது மக்களவையில் பெரும் அமளுக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டதன் மூலம் இதை நாடாளுமன்றம் முழுமையாக நிறைவேற்றியுள்ளது. இந்த மசோதாவானது ராஜ்யசபாவில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- இந்த மசோதாவானது 1952 ஆம் ஆண்டின் ஒளிப்பதிவு சட்டத்தை திருத்துகிறது. மேலும் இதன் கீழ் மத்திய திரைப்பட சான்றிதழ் வாரியமானது வழங்கிய சான்றிதழானது 10 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் என்ற நிலையிலிருந்து தற்போது நிரந்தரமாக செல்லுபடியாகும் என்ற நிலைக்கு மாறியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## திங்க் 20 உச்சி(ஜி 20) மாநாடானது கர்நாடகாவின் மைசூருவில் நடைப்பெற்றது




- G20 மேம்பாடு தொடர்பான கொள்கைப் பிரச்சினைகளைப் பற்றி உயர்மட்ட வல்லுநர்கள் மற்றும் சிந்தனைக் குழுக்கள் விவாதிக்க திங்க்20 உச்சி மாநாடானது G20 இந்தியாவின் தலைமையின் கீழ் கர்நாடகாவின் மைசூரில் நடைபெற உள்ளது.
- நிலையான வளர்ச்சிக்கான வாழ்க்கை முறை, பெண்கள் தலைமையிலான மேம்பாடு, மேக்ரோ பொருளாதாரம் மற்றும் வர்த்தகம், டிஜிட்டல் மாற்றம், உலகளாவிய நிதி ஒழுங்கை துரிதப்படுத்துதல், பசுமை மாற்றம் போன்ற உலகின் முக்கிய பிரச்சனைகள் குறித்து விவாதிப்பதை நோக்கமாக கொண்டுள்ளது

## G-20யின் அதிகாரத்துவத்திற்கான உச்சி மாநாடு




- இந்தியாவின் தலைமையின் கீழ், G20யின் அதிகாரத்துவத்திற்கான (EMPOWER) உச்சி மாநாடானது குஜராத்தின் தலைநகரமான காந்திநகரில் நடைப்பெற்றது. இந்த மாபெரும் மாநாடானது மத்திய குழந்தைகள் மற்றும் பெண்கள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

- இது இரண்டு நாள் மாநாடாகும்(ஆகஸ்ட் 01 – ஆகஸ்ட் 02). "பெண்கள் தலைமையிலான வளர்ச்சி: நிலையான, சமத்துவம் உள்ளடக்கிய மற்றும் சமமான உலகப் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்தல்" என்பது இந்த மாநாட்டின் கருப்பொருளாகும்.

## வரலாற்றுச் சிறப்புமிக்க முயற்சியாக, நாடு முழுவதும் உள்ள 508 ரயில் நிலையங்களை மறுவடிவமைப்பு செய்யும் திட்டத்தை பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.



- வரலாற்றுச் சிறப்புமிக்க முயற்சியாக, பிரதமர் மோடி, நாடு(இந்தியா) முழுவதும் உள்ள 508 ரயில்வே நிலையங்களின் மேம்பாடு மற்றும் மறுவடிவமைப்புக்கான திட்டத்தின் அடிக்கல்லை தொடங்கி வைத்தார்
- இது நாடு முழுவதும் 1309 ரயில்வே நிலையங்களை மறுவடிவமைக்க "அமிர்த பாரத் நிலையத் திட்டம்" யின் கீழ் தொடங்கப்பட்டதாகும். மேலும் இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, 508 ரயில்வே நிலையங்களை 24,470 கோடி ரூபாய் செலவில் மறுவடிவமைப்பு செய்யப்படும் என மத்திய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## இந்திய குடியரசுத் தலைவர் "நூலகங்களின் திருவிழா 2023" ஐத் தொடங்கி வைத்துள்ளார்.




- இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தேசிய தலைநகரமான புதுதில்லியில் உள்ள மாபெரும் பிரகதி மைதானத்தில் "நூலகங்களின் திருவிழா 2023"ஐ தொடங்கி வைத்துள்ளார்.
- இந்த திருவிழாவானது கலாச்சார அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு இரண்டு நாள் நடைபெற உள்ளது. மேலும் இந்தியாவில் உள்ள சிறு மற்றும் மைய நூலகங்களை டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் நவீனமயமாக்கல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு இந்த மாநாடானது நடைபெறுகிறது.

## அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளைக்கான மசோதா 2023

- பாராளுமன்ற லோக்சபாவில் அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளைக்கான மசோதா 2023 ஆனது நிறைவேற்றப்பட்டுள்ளது.
- கணிதம், பொருளியல் உள்ளிட்ட இயற்கை அறிவியல் துறைகளில் ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் அதன் மேம்பாடு ஆகியவற்றை சிறு குறு தொழில்முனைவோருக்கு வழங்குவதற்கான வழிமுறைகளை திருத்துவதை நோக்கமாக கொண்டு இந்த மசோதாவானது நிறைவேற்றப்பட்டுள்ளது.
- இதில் குறிப்பாக பொறியியல் மற்றும் அறிவியல் ஆராய்ச்சி வாரியச் சட்டம், 2008 ஐ இந்த மசோதா ரத்து செய்து, அதன் கீழ் அமைக்கப்பட்ட பொறியியல் மற்றும் அறிவியல் ஆராய்ச்சி வாரியத்தை கலைக்கிற செயல்முறையானது முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

### e-CARe

- வெளிநாட்டில் இறக்கும் இந்தியர்களின் உடல்களை விரைவாக சொந்த நாட்டிற்கு மாற்றுவதற்கு வசதியாக, e-CARe(இன்டர்லைஃப் ரீமெய்ன்களுக்கான இ-கிளியரன்ஸ்) என்ற வலைத்தளத்தை மத்திய அரசாங்கம் அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளதாக அதன் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.
- இறந்த மனித உடல்களை சர்வதேச எல்லைகளுக்கு கொண்டு செல்வதில் ஏற்படும் தாமதத்தை தவிர்த்து உரிய நடவடிக்கைகள் மூலம் அவர்களின் சொந்த மண்ணிற்கு கொண்டு சென்று அவர்களின் உடலை குடும்பத்திற்கு வழங்குவதை நோக்கமாக கொண்டு இந்த வலைத்தளமானது அமைய உள்ளது என மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

## ஜன் விஸ்வாஸ் விதிமுறைகள் திருத்த மசோதா 2023

- ஜன் விஸ்வாஸ் விதிமுறைகள் திருத்த மசோதா 2023 –விற்கு நாடாளுமன்ற மாநிலங்களவையானது ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் இந்த மசோதாவானது சமீபத்தில் மக்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- நாட்டின் பொது மக்கள் எளிமையாக வாழ்வதற்கும் எளிதாக வணிகம் செய்வதற்கும் நம்பிக்கை அடிப்படையிலான நிர்வாகத்தை உறுதிப்படுத்துவதற்கும் மேலும் மேம்படுத்துவதற்காக சில சட்டங்களை திருத்த இந்த மசோதா முயல்கிறது என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

## இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தலைமுறை காந்த அதிர்வு இமேஜிங்(MRI) ஒளிப்பதிவு இயந்திரத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

- அறிவியல் & தொழில்நுட்பம், அணுசக்தி, பொது குறைகள், ஓய்வூதியத்திற்கான மத்திய இணை அமைச்சர் (தனி பொறுப்பு) டாக்டர் ஜிதேந்திர சிங், ஆகஸ்ட் 01 அன்று இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட, இலகுரக, மலிவு மற்றும் அதிவேக(1.5 டெஸ்லா) அடுத்த தலைமுறை காந்த அதிர்வு இமேஜிங் (MRI) ஒளிப்பதிவு இயந்திரத்தை புதுதில்லியில் அறிமுகப்படுத்தியுள்ளார்.
- இது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஒளிப்பதிவு இயந்திரத்தின் குறைவான விலையின் மூலம் சாமானியர்கள் எளிதாக வாங்க முடியும் என மத்திய அமைச்சர் தெரிவித்துள்ளார். மேலும் இது "மேக் இன் இந்தியா – மேட் ஃபார் தி வேர்ல்ட்" என்ற முன்னெடுப்பின் முக்கிய பகுதியாக பார்க்கப்படுகிறது.

## என் மண் என் நாடு"

- அந்தமான் மற்றும் நிக்கோபார் யூனியன் பிரதேசத்தில் என் மண் என் நாடு என்ற முன்னெடுப்பு பிரச்சாரமானது அதன் தலைநகரமான போர்ட் பிளேயரில் தொடங்கப்பட்டுள்ளது.
- மேலும் போர்ட் பிளேயர் நகராட்சி கவுன்சிலானது அதன் அலுவலக கட்டிட வளாகத்தில் இருந்து காந்தி பூங்கா வரை இதன் முக்கிய நோக்கத்தை பொது மக்களுக்கு விழிப்புணர்வை பரப்புவதற்காக அதன் யாத்திரையானது தொடங்கப்பட்டுள்ளதாகும். இந்த முன்னெடுப்பானது 75 மரக்கன்றுகளை நட்டு இந்த யாத்திரையை நகராட்சி தலைவர் செசி. தில்குஷ் மீனா கொடியசைத்து தொடங்கி வைத்துள்ளார்.

## கடலோர மீன்வளர்ப்பு ஆணைய திருத்த மசோதா 2023

- கடலோர மீன்வளர்ப்பு ஆணைய திருத்த மசோதா 2023 ஆனது பாராளுமன்ற மாநிலங்களவையானது ஆகஸ்ட் 09 அன்று ஒப்புதல் அளித்து நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது. மேலும் இந்த திருத்த மசோதாவானது மக்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- இந்த மசோதாவானது "கடலோர மீன்வளர்ப்பு ஆணைய சட்டம், 2005-ஐ திருத்துவதாக அமைகிறது. இதன் மூலம் கடலோர மீனவர்களுக்கு கிசான் கடன் அட்டைகள் வழங்கப்பட்டு அதன் மூலம் மீனவர் சமுதாயமானது முன்னேறும் என மத்திய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## மாநிலங்களவையில் அரசியலமைப்பின் பட்டியலிடப்பட்ட சாதிகளுக்கான ஆணைய திருத்த மசோதா 2023 ஆனது நிறைவேற்றப்பட்டுள்ளது.

- ஆகஸ்ட் 09 அன்று பாராளுமன்றத்தின் மாநிலங்களவையில் அரசியலமைப்பின் பட்டியலிடப்பட்ட சாதிகளுக்கான ஆணைய திருத்த மசோதா 2023க்கு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் இந்த மசோதாவிற்கு மக்களவை சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- இந்த மசோதாவானது சட்டீஸ்கர் மாநிலத்தில் உள்ள பட்டியல் சாதிகளின் அதிகார பட்டியலை மாற்றியமைக்கும் அரசியலமைப்பு (பட்டியலிடப்பட்ட சாதிகள்) விதி 1950 ஐ நிறுத்துவதாக அமைகிறது. மேலும் இது சத்தீஸ்கரில் உள்ள மஹ்ரா மற்றும் மஹாரா உட்பட பல சமூகங்களை இந்த மசோதா உள்ளடக்கியுள்ளதாகும்.

## ERMED கூட்டமைப்பின் நான்காவது தேசிய மாநாடு தொடக்கம்.

- டிஜிட்டல் சுகாதார மாற்றத்திற்கான நூலகங்களை மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் ERMED கூட்டமைப்பின் நான்காவது தேசிய மாநாடானது குடும்ப நலத்துறை மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் பாரதி பவார் அவர்களால், புது தில்லியில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
- கோவிட் காலத்தில் தொலைத்தொடர்பு மற்றும் சுகாதாரத் துறையில் டிஜிட்டல் மாற்றத்தின் அவசியத்தை கற்றுக்கொண்டதையடுத்து மீண்டும் அந்த நிலைக்கு திரும்பாமல் இருப்பதற்கான பல வழிமுறைகளை கையாளுவது பற்றிய விழிப்புணர்வை பரப்புவதை நோக்கமாக கொண்டு இந்த மாநாடானது நடைபெற உள்ளது.

## தேசிய விண்வெளி கண்டுபிடிப்பு சவால் 2023"

- அடல் மேம்பாட்டு திட்டம், NITI ஆயோக் அமைப்புடன், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோவுடன் இணைந்து நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்களுக்கும் "தேசிய விண்வெளி கண்டுபிடிப்பு சவால் (NSIC) 2023" ஐ ஆகஸ்ட் மாதம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- 5ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் செப்டம்பர் 20ஆம் தேதி வரை இந்த முன்னெடுப்புக்கான திறந்தவெளி மேடையானது வழங்கப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. மேலும் இது நவீன காலத்திற்கான விண்வெளித் தொழில்நுட்ப சிக்கல்களைத் தீர்க்க தங்களைப்புதுமைப்படுத்திக்

கொள்வதற்கான வழிமுறைகளை வழங்குவதை நோக்கமாக கொண்டு இந்த முன்னெடுப்பானது வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 163 ஆண்டுகள் பழமையான இந்திய தண்டனைச் சட்டத்தை மாற்றியமைக்க திட்டம்.




- மத்திய உள்துறை அமைச்சரான அமித் ஷா, பழமையான மற்றும் 163 ஆண்டுகளை கடந்த 1860 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்திய தண்டனைச் சட்டத்திற்குப் பதிலாக பாரதிய நியாய சன்ஹிதா சட்டம், 2023ஐ நாடாளுமன்றத்தில் சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளார்.
- இந்த பாரதிய சாக்ஷ்ய மசோதா, 2023 மற்றும் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, 2023 இது முறையே 1872 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்திய சாட்சியச் சட்டத்தையும் 1973 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட குற்றவியல் நடைமுறைச் சட்டத்தையும் திருத்துவதாக அமைகிறது.

## பாரத பிரிவினையில் பயங்கர நினைவு நாளில் உயிர் இழந்தவர்களை தேசம் நினைவுக்கோரும் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.



- 1947ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிவினையின் போது ஏற்பட்ட கடும் போராட்டங்கள் மற்றும் உயிர் தியாகங்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் இந்தியாவில் பிரிவினை பயங்கர நினைவு தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- இந்திய பிரதமர் மோடி ஆகஸ்ட் 14 ஆம் தேதியை பிரிவினையின் கொடூர நினைவு தினம் அல்லது "விபஜன் விபிஷிகா ஸ்மிருதி திவாஸ்" ஆக அறிவித்துள்ளார். சமூகப் பிளவுகள், நல்லிணக்கமின்மை ஆகிய கொடிய விஷத்தை அகற்றி, சமூக நல்லிணக்கம், ஒற்றுமை மற்றும் மனித அதிகாரம் ஆகியவற்றின் உணர்வை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இந்த நாள் நமக்கு நினைவூட்டுவதாக நமது பிரதமர் கூறியுள்ளார்.

## நாட்டின் மிகப்பெரிய – புதிய தகவல் தொழில்நுட்ப மையத்தை லக்னோவில் உருவாக்க திட்டம்.

- உத்தரப் பிரதேச மாநிலத்தின் தலைநகரமான லக்னோவில் புதிய மற்றும் நாட்டின் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப மையத்தை அமைப்பதற்கான ஆயத்தப் பணிகளானது அம்மாநில முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்டுள்ளது
- மாநில ராஜ்கிய நிர்மான் நிகம்(UPRNN) அமைப்பானது முக்கிய நகரமான கான்பூர் சாலையில் உள்ள அமௌசி மற்றும் நாடர்கஞ்ச் தொழில்துறை பகுதிகளில் கிட்டத்தட்ட 40 ஏக்கரில் ஐடி தொழில்நுட்ப பூங்கா மற்றும் மையம் மற்றும் 6.9 ஏக்கரில் சர்வதேச இன்குபேஷன் வசதி மையம் ஆகியவற்றை அமைப்பதற்கான வரைபடமானது ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் அதற்கான பணிகள் நடைபெற உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அறிவார்ந்த மாபெரும் தேசிய ஊடக மாநாடு 2023 ஆனது புது தில்லியில் நடைபெற்றுள்ளது.

- மின்னணு மற்றும் அச்சு ஊடக சங்கங்களின் சார்பாக சிறப்புமிக்க நிகழ்வான மதிப்பிற்குரிய ராஷ்ட்ரிய நவரத்னா விருதுகள் 2023 மற்றும் தேசிய ஊடக மாநாடானது புது தில்லியில் உள்ள விக்யான் பவனில் நடைபெற்றுள்ளது.
- இந்தியாவின் ஒவ்வொரு மூலையிலிருந்தும், இந்த புகழ்பெற்ற விருதுகளுக்கான பரிந்துரைகளில் உள்ள சிறந்த நபர்கள் மற்றும் சிறந்த நிறுவனங்களுக்கு 2023 ஆம் ஆண்டுக்கான மதிப்புமிக்க ராஷ்ட்ரிய நவரத்னா விருதுகளானது வழங்கி கௌரவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இஸ்ரேலில் இந்திய-யூத கலாச்சார மதிப்புமிக்க சதுக்கம்(அரங்கம்) திறக்கப்பட்டுள்ளது.

- இந்தியாவின் 77வது சுதந்திர தினத்தை போற்றும் மற்றும் கொண்டாடும் வகையில், இஸ்ரேல் நாட்டில் உள்ள ஈலாட் நகர பகுதியில் "இந்திய-யூத கலாச்சார சதுக்கம்" (அரங்கம்) ஆனது அந்நாட்டு அரசாங்கத்தால் திறக்கப்பட்டுள்ளது.
- இந்த அமைப்பானது இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான மற்றும் நல்ல ராஜாங்க உறவுகளின் "நாகரீக

பிணைப்புக்கு" அர்ப்பணிக்கப்பட்டதாகும். மேலும் இந்தியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான நட்பு, அன்பு, பரஸ்பர அக்கறை மற்றும் ஆழமான ராஜாங்க தொடர்பை அடையாளப்படுத்துவதை நோக்கமாக கொண்டு இது வடிவமைக்கப்பட்டுள்ளது என ஈலாட் நகர மேயர் எலி லங்க்ரி தெரிவித்துள்ளார்.

### மத்திய அமைச்சர் பாரத் புதிய கார் மதிப்பீட்டு திட்டத்தை (பாரத் NCAP) அறிமுகப்படுத்துகிறார்.

- மத்திய நெடுஞ்சாலை மற்றும் சாலைப் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஸ்ரீ நிதின் கட்கரி, நாட்டில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட "பாரத் புதிய கார் மதிப்பீடு என்ற முன்மாதிரி திட்டத்தை (பாரத் NCAP) தொடங்கி வைக்க உள்ளார்.
- நாட்டின் சாலை போக்குவரத்து மற்றும் பாதசாரிகள் மற்றும் வாகன ஓட்டிகளின் பாதுகாப்பை உயர்த்துவதன் மூலம் சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான மத்திய அரசாங்கத்தின் உறுதிப்பாட்டில் இந்தத் திட்டம் ஒரு குறிப்பிடத்தக்க படியாக அமையும் என மத்திய அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த திட்டமானது இந்தியாவில் "பாதுகாப்பு உணர்திறன் கொண்ட கார் மூலதன சந்தையை உருவாக்கும்" என்று எதிர்பார்க்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

### நாட்டின் விலங்கு சுகாதார அமைப்பை வலுப்படுத்துவதற்காக G20 தொற்றுநோய் நிதியமானது 25 மில்லியன் டாலர் கடனுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.



- இந்தியாவின் கால்நடை சுகாதார அமைப்பை வலுப்படுத்துவதற்காக தேசிய கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறையின் 25 மில்லியன் டாலர் முன்னெடுப்பு திட்டத்திற்கு G20 தொற்றுநோய் நிதியம் அமைப்பானது சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தோனேசியாவின் G20 தலைமையின் கீழ் நிறுவப்பட்ட, இந்த தொற்றுநோய் நிதியம் அமைப்பானது, மிகக்குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட வளரும் நாடுகளில் கவனம் செலுத்தி, தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய தொற்றுநோய் தடுப்பு, தயார்நிலை மற்றும் அதன் எதிர்ப்பு திறன்களை வலுப்படுத்தத்தற்காக முக்கியமான முதலீடுகளுக்கு நிதியளிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### இந்தியாவின் முதல் விளையாட்டு அடிப்படையிலான கற்றலியல் நூலகமானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- புதுமையான கல்வி வழங்கும் சேவை நிறுவங்களின் முன்னணியில் இருக்கும் Ryan Group of Schools நிறுவனமானது The All India Toy Manufacturers' Association (TAITMA) அமைப்புடன் இணைந்து, "இந்தியாவின் முதல் தொடக்க பொம்மை நூலகம்" என்று பெயரிடப்பட்ட "விளையாட்டு அடிப்படையிலான கற்றலியல் நூலகத்தை" அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த நூலகமானது கற்றல் மற்றும் முழுமையான வளர்ச்சியை வளர்ப்பது மற்றும் குழந்தைகள் இந்த நூலகம் மூலம் பொம்மைகளை கடன் வாங்கவும், அவற்றை வீட்டில் அனுபவிக்கவும், அதை மீண்டும் திருப்பித் ஒப்படைப்பதன் மூலம் விளையாட்டு அடிப்படையிலான கற்றலை முன்பை விட அணுகக்கூடியதாக ஆக்குவதை நோக்கமாக கொண்டு இந்த நூலகமானது வடிவமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### அஸ்மிதா



- ராணுவ வீரர்களின் மனைவிகள் நல சங்கம் அமைப்பானது(AWWA) தேசிய தலைநகரான புது டெல்லியில் உள்ள மாபெரும் மானெக்ஷா மையத்தில் 'அஸ்மிதா- ராணுவ மனைவிகளின் ஊக்கமளிக்கும் கதைகள்' என்ற இரண்டாவது முன்னெடுப்பை ஏற்பாடு செய்துள்ளது. இதன் தலைமை மற்றும் சிறப்பு விருந்தினராக இந்திய குடியரசு தலைவர் முர்மு உள்ளார்.
- விடாமுயற்சி மற்றும் மன உறுதியுடன், பல்வேறு துறைகளிலும் தனக்கென்று தனி இடத்தை உருவாக்கிக்கொண்ட ராணுவ வீரர்களின் மனைவிகளின் எழுச்சியூட்டும் வீர தீர கதைகளை பகிர்ந்து கொள்வதை நோக்கமாக கொண்டு இந்த முன்னெடுப்பானது தொடங்கப்பட்டுள்ளதாகும். இது ராணுவ வீரர்களின் துயர வாழ்க்கையினை மக்களின் கண்முன் கொண்டு வருவதை நோக்கமாக கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதாகும்.

## இரயில்-கடல்-ரயில் போக்குவரத்தை மேம்படுத்துவதற்கான முன்னெடுப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- இரயில்-கடல்-ரயில் (RSR) போக்குவரத்தை ஒருங்கிணைப்பதன் மூலம் நாட்டின் நிலக்கரியை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு திறம்பட மாற்றுவதற்கான திட்டத்தை மேம்படுத்துவதற்கு மத்திய நிலக்கரி அமைச்சகமானது சமீபத்தில் ஒரு முன்னெடுப்பு முன்முயற்சியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த பல்துறை போக்குவரத்து முன்னெடுப்பானது நாட்டின் சுரங்கங்களில் இருந்து துறைமுகங்களுக்கு நிலக்கரியை தடையின்றி கொண்டு செல்லவும், அதன் இறுதி பயனர்களுக்கு போக்குவரத்து செலவுகளை முற்றிலும் குறைக்கவும் மற்றும் தளவாட செயல்திறனை மேம்படுத்துவதையும் நோக்கமாக கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்த திட்டமானது முக்கிய மாநிலங்களான ஜார்க்கண்ட், ஒடிசா, சத்தீஸ்கர் மற்றும் மத்தியப் பிரதேசத்தின் சில பகுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## இந்தியாவும் ஆசியான் அமைப்பு இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்

- இந்தியாவும் ஆசியான் நாடுகளின் கூட்டமைப்பும் தற்போதைய தங்களின் பொருட்களுக்கான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை மறுஆய்வு செய்வதையும், இருதரப்புகளுக்கான வர்த்தகத்தில் உள்ள "சமச்சீரற்ற தன்மையை" நிவர்த்தி செய்வதையும் நோக்கமாக கொண்டு மதிப்பாய்வை முடிப்பதற்கான 2025 இலக்கை நிர்ணயம் செய்யவும் முடிவு எடுத்துள்ளதாக வெளியிடப்பட்டுள்ள மத்திய அரசின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தோனேசியாவில் சமீபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இரு நாடுகளின் வழிகாட்டுதலுக்காக செப்டம்பர் தொடக்கத்தில் திட்டமிடப்பட்டுள்ள இந்தியா-ஆசியான் தலைவர்கள் உச்சி மாநாட்டில் AITGA தரவு மதிப்பாய்வானது நன்முறையில் மேம்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய கல்விக் கொள்கையானது அதிகாரப்பூர்வமாக ரத்து செய்துள்ளதாக கர்நாடகா அறிவித்துள்ளது.

- தேசிய கல்விக் கொள்கையை(NEP) திருப்பி எடுத்து கொள்வதாகவும், அடுத்த கல்வியாண்டு முதல் புதியதாக அமல்படுத்தப்படும் மாநிலக் கல்விக் கொள்கையை வெளியிடுவதாகவும் கர்நாடக மாநில அரசாங்கமானது அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
- இந்த கொள்கையானது மாநிலங்களின் நம்பிக்கையை எடுத்துக்கொள்ளாமல் உருவாக்கப்பட்டது என்றும் கல்விக் கொள்கையை மாநிலங்களின் மீது திணிக்க முடியாது என்றும் பலதரப்பட்ட, பன்மை தன்மை கொண்ட நாடுகளில் ஒரே மாதிரியான கொள்கை சாத்தியமில்லை என்றும் அவர் அந்த அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார். மேலும் தமிழ்நாடு மற்றும் கேரளா போன்ற மாநிலங்கள் ஏற்கனவே NEP கொள்கையை நிராகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**குறிப்பு**

- இந்தியாவில் புதிய கல்விக் கொள்கையானது 3-18 வயதிற்குட்பட்டவர்களுக்கு சமமான மற்றும் தரமான கல்வியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. வழக்கமான கற்றலில் இருந்து முழுமையான, நடைமுறை மற்றும் சிக்கலைத் தீர்க்கும் கல்விக்கு கவனம் செலுத்துகிறது. மனப்பாடம் மற்றும் பாரம்பரிய கிரேடிங் முறைகள் மீது சிக்கல் தீர்க்கும் திறன்களை வலியுறுத்துகிறது.

## G20 நான்காவது கலாச்சார பணிக்குழு(CWG) மாநாடானது வாரணாசியில் நடத்த திட்டம்.

- G20 4வது கலாச்சார பணிக்குழு(CWG) கூட்டமானது உத்திர பிரதேசத்தின் வாரணாசியில் ஆகஸ்ட் 23 அன்று தொடங்க உள்ளது. இந்த மாநாடானது ஆகஸ்ட் 23 இல் தொடங்கி ஆகஸ்ட் 26 இல் முடிவடைகிறது.
- "G20 கலாச்சாரம்: பாரம்பரியம் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான உலகளாவிய கதையை வடிவமைத்தல்" என்ற தலைப்பினை கருப்பொருளாக கொண்டு இந்த மாநாடானது நடைபெற உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். நாட்டின் பண்பு, பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றை நிலைநிறுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த மாநாடு நடைபெற உள்ளது.

## கடல்சார் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இந்திய கடலோர காவல்படை மற்றும் பிலிப்பைன்ஸ் கடலோர காவல்படை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- இரு நாடு மற்றும் பிராந்திய கடல்சார் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இந்திய கடலோர காவல்படையுடன் பிலிப்பைன்ஸ் நாட்டின் கடலோர காவல்படையானது ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஆகஸ்ட் 2023 இல் மேற்கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தமானது இரு நாடுகளின் கடற்படை உயர்மட்ட தளபதி அவர்களின் முன்னிலையில் புதுதில்லியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் எழும் பிரச்சினைகளை இணைந்து தீர்த்து வைப்பது, பாதுகாப்பான கடல்தளங்களை உறுதி செய்தல் ஆகியவற்றை முக்கிய நோக்கமாக கொண்டு இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகும்.

## தேசிய பாதுகாப்பு உத்திகள் மாநாடு

- இந்திய பிரதமர் திரு மோடியின் தலைமையில், தேசிய பாதுகாப்பு நெறிமுறையின் அனைத்து அம்சங்களையும் பலப்படுத்துவதன் மூலம் உறுதியான மற்றும் பாதுகாப்பான தேசத்தை உறுதி செய்யும் வகையில் புதுதில்லியில் தேசிய பாதுகாப்பு உத்திகள் (என்எஸ்எஸ்) மாநாடு-2023 ஆனது தொடங்கப்பட்டுள்ளது.
- இது இரண்டு நாள் மாநாடாகும். மேலும் இந்த மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தொடங்கி வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## B 20 உச்சி மாநாடானது புதுதில்லியில் தொடங்குகிறது.

- 2023 ஆம் ஆண்டிற்கான B20 உச்சி மாநாடானது இந்தியாவின் தலைநகரமான புது டெல்லியில் தொடங்கியுள்ளது. R.A.I.S.E என்ற கருப்பொருளை அடிப்படையாக கொண்டு இந்த மாநாடானது நடைபெறுகிறது.
- இது உலக நாடுகளின் பெரிய கட்டமைப்பு திட்டங்களில் கவனம் செலுத்தவும் அதை பற்றி விவாதிக்கவும், B20 இந்தியா ஆப்பிரிக்க பொருளாதார ஒருங்கிணைப்பில் சமூகம் , சுற்றுச்சூழல் மற்றும் வணிகத்தில் முன்னேற்றத்தை மேற்கொள்வது ஆகியவற்றை நோக்கமாக கொண்டு இந்த மாநாடானது நடைபெறுகிறது.

## கட்டமைப்பு ஒருமைப்பாடு குறித்த மூன்றாவது சர்வதேச மாநாடானது சென்னையில் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது.




- 2023 ஆம் ஆண்டிற்கான "கட்டமைப்பு ஒருமைப்பாடு" குறித்த மூன்றாவது சர்வதேச மாநாடானது(ICONS 2023) தமிழ்நாட்டின் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள புகழ்பெற்ற மாமல்லபுரத்தில் நடைபெற்றுள்ளது.
- இந்த மாநாடானது அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி அமைப்பின் இயக்குநர் டாக்டர் என் கலைச்செல்வி அவர்களால் தொடங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த மாநாடானது இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம் மற்றும் சொசைட்டி ஃபார் ஃபெயில்யர் அனாலிசிஸ் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகும்.

## கழிவு மேலாண்மையில் ஒத்துழைப்பை மேம்படுத்த இந்தியா மற்றும் ஜப்பான் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- கொல்கத்தாவை தளமாகக் கொண்ட சர்வதேச கழிவு காற்று மற்றும் நீர் மேலாண்மை சங்கம் (ISWMAW) மற்றும் ஜப்பானின் கியோட்டோ பியோண்ட் SDGs கூட்டமைப்பு ஆகியவைகளுக்கு இடையே பல்வேறு சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் இரு ஆசிய நாடுகளுக்கு இடையே ஆராய்ச்சி, கல்வி மற்றும் தொழில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான ஒரு புரிந்துணர்வு கையெழுத்திட்டுள்ளன.
- கல்வியாளர்கள், தொழில்முனைவோர்கள் மற்றும் தகவல் பரிமாற்றம் மற்றும் இரு நாடுகளுக்கிடையேயான ஆராய்ச்சி ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான நிலையான வளர்ச்சி இலக்குகளை மையமாகக் கொண்டு இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 2023 ஆம் ஆண்டிற்கான சர்வதேச கல்வி முறை உச்சி மாநாடானது துபாயில் நடைபெறுகிறது

- UAE யின் துபாயில் உள்ள ஹம்தான் பின் முகமது ஸ்மார்ட் பல்கலைக்கழக மாபெரும் வளாகத்தில்(HBMSU) 2023 ஆம் ஆண்டிற்கான சர்வதேச கல்வி முறை குறித்த உச்சிமாநாட்டை சர்வதேசப் பொருளாதார மேம்பாட்டு கூட்டமைப்பானது(FEDA) நடத்தியுள்ளது.
- FEDA என்பது குறிப்பாக இந்தியாவில் பொருளாதார மேம்பாட்டு வளர்ச்சியை ஊக்குவிக்கும் முக்கியப் பொருளாதார அறிஞர்கள் மற்றும் உறுப்பினர் அடங்கிய சர்வதேச அமைப்பாகும். கல்வியில் சிறந்து விளங்கும் லட்சிய மாணவ மற்றும் மாணவிகளுக்கு முக்கியமான மற்றும் பயன்பெறும் வகையிலான ஒரு சிறந்த தளத்தை வழங்குவதை நோக்கமாக கொண்டு இந்த உச்சி மாநாடானது நடைபெற்றுள்ளது

## CPEC இன் கீழ் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் ஆகியவற்றிற்காக சீனாவும் பாகிஸ்தானும் ஆறு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளன.

- பல பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான CPEC(சீனா—பாகிஸ்தான் பொருளாதார வழித்தடம்) திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் ஒத்துழைப்பை மேலும் துரிதப்படுத்தவும் அதனை விரிவுபடுத்தவும் சீனாவும் பாகிஸ்தானும் ஆறு முக்கியப் பகிர்மான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.
- CPEC என்பது சீனாவின் வடமேற்கு துருவ ஜின்ஜியாங் உய்குர் தன்னாட்சிப் பகுதி மற்றும் பாகிஸ்தான் நாட்டின் மேற்கு மாகாணமான பலுசிஸ்தானில் உள்ள குவாடர் துறைமுகத்தை இணைக்கும் மிகப்பெரிய உள்கட்டமைப்பு திட்டங்களின் 3,000-கிமீ நீளமான பாதையாகும். இது இந்தியாவின் காஷ்மீர் பகுதி அதாவது பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர்(POK) வழியாக அமைவதால் இந்த திட்டத்திற்கு நீண்ட காலமாக இந்தியா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

## உக்ரைன்-ரஷ்யா அமைதிப் பேச்சுவார்த்தையில் இந்தியா பங்கேற்கும் — சவுதி அரேபியா

- சவுதி அரேபியா தலைமையில் நடைபெறும் ரஷ்யா-உக்ரைன் போர் அமைதிப் பேச்சுவார்த்தையில் நடுவராக பங்கேற்க இந்தியாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
- உக்ரைனில் சமீபத்திய காலங்களில் நிலவும் நெருக்கடியான சூழ்நிலைக்கு அமைதிப் பேச்சுவார்த்தையிம் மூலம் தீர்வு காணும் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு இந்தியா எப்போதும் துணை நிற்கும் என வெளியுறவு செயலர் குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த பொது கூட்டத்தில் ரஷ்யா விலக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- இந்தியாவின் நீர் தொடர்பான சிக்கல்களை தீர்ப்பதற்கான திட்டத்தில் இஸ்ரேல் இணைந்துள்ளது.
- தி சர்க்கிள் வணிக மேம்பாட்டு நிறுவனமான ஃபவுண்டர்ஸ் கிளப் (எஃப்சி), இந்தியாவில் பொது மக்கள் அதிகம் பாதிக்கப்படக்கூடிய மிக முக்கிய பிரச்சினையான நீர் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக தி வாட்டர் சேலஞ்ச் என்ற முன்னெடுப்பு முயற்சியில் இஸ்ரேல் நாடு இணைந்துள்ளது.
- இந்தத் திட்டமானது இந்தியாவில் உள்ள இஸ்ரேல் தூதர் மற்றும் தி சர்க்கிள் நிறுவனர் கரன்பால் சிங் ஆகியோருக்கு இடையேயான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் முறையாக தொடங்கப்பட்டது என இஸ்ரேல் தூதர் தெரிவித்துள்ளார்.
- இந்தியாவில் நீர் தொழில்நுட்பங்களில் உள்ள சவால்களை எதிர்கொள்ளுதல் மற்றும் நீர்வள மேலாண்மை ஆகியவற்றை நோக்கமாக இந்தத் திட்டம் கொண்டுள்ளது.

## இலங்கை நாட்டின் டிஜிட்டல் அடையாள மேம்பாடு திட்டத்திற்கு இந்திய அரசாங்கமானது ரூ.45 கோடி நிதி உதவி வழங்க திட்டமிட்டுள்ளது.

- இலங்கை நாட்டின் டிஜிட்டல் நேர்மறையான மாற்றத்தை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக, தனித்துவமான டிஜிட்டல் அடையாள மேம்பாட்டு திட்டத்திற்கு ஆதரவாக

இந்திய அரசாங்கமானது 45 கோடி ரூபாய் நிதி உதவியை வழங்கியுள்ளது.

- இது இலங்கையின் கொழும்பில் உள்ள ஜனாதிபதி அலுவலகமானது தனது சமீபத்திய அறிக்கையில் இந்திய அரசாங்கத்திடமிருந்து நிதி பெறப்பட்டதை உறுதிப்படுத்தியுள்ளது. மேலும் இந்த நடவடிக்கையானது நாட்டின் டிஜிட்டல் மயமாக்கலை மேம்படுத்தும் செயல்முறையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த முன்னெடுப்பானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.



## இந்திய கலையின் பெருமை பற்றிய கண்காட்சியானது டாக்காவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- வங்கதேசத்தில் உள்ள இந்திய உயர் ஆணையகம் அதன் தலைநகரமான டாக்காவில் உள்ள இந்திரா காந்தி கலாச்சார மையத்தில் ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ் என்ற மாபெரும் நிகழ்வின் நினைவாக இந்திய கலையின் பெருமை என்று தலைப்பிடப்பட்ட கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.
- வங்கதேசத்தின் புகழ்பெற்ற கலைஞர்களின் 75 கலைப் படைப்புகளைக் காட்சிப்படுத்தும் வகையில் இந்த கண்காட்சியை இந்திய உயர் ஆணையர் பிரனய் வர்மா திறந்து வைத்துள்ளார். மேலும் இது இரு நாடுகளின் கலாச்சார பரிமாற்றத்தையும் ஊக்குவிக்கிறது என்றும் இந்தியாவிற்கும் வங்கதேசத்திற்கும் இடையிலான ஆழமான பிணைப்பை உலகிற்கு இந்த கண்காட்சியானது எடுத்துக்காட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாகும்.

## பாகிஸ்தான் நாட்டின் தற்காலிக பிரதமராக அன்வார்-உல்-ஹக் கக்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

- பாகிஸ்தான் நாட்டின் தற்காலிக பிரதமராக பலுசிஸ்தான் அவாமி லீக் கட்சியின்(BAP) செனட்டரான அன்வார்-உல்-ஹக் கக்கரை நியமிப்பதற்குறிய தீர்மானத்திற்கு பாகிஸ்தான் அதிபர் டாக்டர் ஆரிஃப் அல்வி ஒப்புதல் அளித்துள்ளார்.
- நாட்டின் தலைநகரமான இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது எதிர்க்கட்சி மற்றும் பிரதமர் ஷெஹ்பாஸ் ஷெரீப் ஆகியோருக்கு இடையே ஒருமித்த கருத்து எட்டப்பட்டதையடுத்து இந்த நியமனமானது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகும். இவர் இதற்கு முன்பாக 2015 முதல் 2017 ஆம் ஆண்டுகளில் பலுசிஸ்தான் மாநில "அரசாங்கத்தின் செய்தித் தொடர்பாளராக" சிறப்பாக பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## "போலந்தின் 16வது ஐஓஏஏவில் இந்தியா இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

- போலந்து நாட்டின் சோர்சோவில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டிற்கான வானியல் மற்றும் வானியற்பியல் (IOAA) 16வது சர்வதேச ஒலிம்பியாட் போட்டியில் இந்திய அணியானது நான்கு தங்கம் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்த தொடரானது ஆகஸ்ட் 10 முதல் ஆகஸ்ட் 20 வரை நடைபெற்றுள்ளது. மேலும் இதில் ஐக்கிய இராச்சியம் ஐந்து தங்க பதக்கங்களுடன் முதலிடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த ஒலிம்பியாட் போட்டியில் கிட்டத்தட்ட 50 நாடுகளைச் சேர்ந்த 236 மாணவர்கள் கலந்து கொண்டு அனைத்துப் தொகுப்பு விளையாட்டு பிரிவுகளிலும் 27 தங்கம், 41 வெள்ளி மற்றும் 50 வெண்கலம் ஆகிய பதக்கங்களை வென்றுள்ளனர்.

## 40 ஆண்டுகளில் முதல் முறையாக இந்தியப் பிரதமர் ஒருவர் கிரீஸ் நாட்டிற்கு பயணம் மேற்கொண்டுள்ளார்

- பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்ற பிரதமர் மோடி, தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க்கில் இருந்து சமீபத்தில் கிரீஸ் நாட்டிற்கு சென்றுள்ளார். இது இரு நாடுகளின் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. ஏனெனில் கிட்டத்தட்ட 40 ஆண்டுகளில் இந்தியப் பிரதமர் ஒருவர் கிரீஸ் நாட்டிற்குச் செல்வது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- மேலும் இந்தியாவின் ராஜதந்திர ஐரோப்பிய உறவிற்கான நுழைவாயிலாக மாறுவதை நோக்கமாக கொண்டு பல்வேறு மேம்பாடு ஒப்பந்தங்களும் இந்த பயணத்தின் போது மேற்கொள்ளப்படும் என வெளிநாட்டு விவகாரங்கள் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

## 2024 ஆம் ஆண்டிற்கான G20 நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான B20 தலைமை பொறுப்பை பிரேசிலிடம் இந்தியா ஒப்படைத்துள்ளது.

- 2024 ஆம் ஆண்டிற்கான G20 நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான தலைமை பொறுப்பை இந்தியா

பிரேசில் நாட்டிடம் B20 தலைவர் பதவியை சமீபத்தில் ஒப்படைத்துள்ளது.

- தற்போதைய B20 இந்தியாவின் தலைவர் N சந்திரசேகரன் இந்த G20 நிகழ்ச்சிகளை சிறப்பாக கையாண்டார் மற்றும் வாசுதேவ கடும்பகம் (ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம், ஒரு பூமி) என்ற கருப்பொருளை மையமாக கொண்டு இந்தியா இந்த ஆண்டு சிறப்பாக உலக நாடுகளை வழிநடத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## பொருளாதாரச் செய்திகள்

### அடுத்து வரும் எட்டு ஆண்டுகளில் இந்தியா ஆண்டுக்கு 6.7% வளர்ச்சியை எட்டும் – S&P குளோபல் அறிக்கை.

- சர்வதேச ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு நிறுவனமான S&P குளோபல் ஆனது அடுத்து வரும் எட்டு நிதியாண்டுகளில் இந்தியாவானது ஆண்டுக்கு 6.7% வளர்ச்சியடையும் என்றும் நிதியாண்டு 2031 முதல் நிதியாண்டு 2024 வரை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அளவானது $3.4 டிரில்லியனில் இருந்து $6.7 டிரில்லியன் ஆக உயரும் எனவும் தனது சமீபத்திய ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
- மேலும் இந்த நிதியாண்டுகளில் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது சுமார் $4,500 டாலராக ஆக உயரும் வாய்ப்புள்ளது என்று அந்த நிறுவனம் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. "முன்னோக்கி: இந்தியாவின் தருணம்" என்று பெயரிடப்பட்டுள்ள தலைப்பின் கீழ் இந்த அறிக்கையானது வெளியிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### இந்தியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதியானது வரலாறு காணாத அளவு உச்சத்தை எட்டியுள்ளது.

- 2022-23 ஆம் நிதியாண்டில் 776.3 பில்லியன் அமெரிக்க டாலர்களை கடந்து இந்தியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதியானது இதுவரை இல்லாத அளவு உச்சத்தை எட்டியுள்ளது என மத்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.
- புதிய வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை மார்ச் 31, 2023 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த ஏப்ரல் 1, 2023 முதல் நடைமுறைக்கு வந்தது. மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்றுமதி திறன் கொண்ட பொருட்களைக் கண்டறிந்து அம்மாவட்டத்தில் வேலைவாய்ப்பை உருவாக்கியதே இந்த உச்சத்தை அடைவதற்கு காரணமாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்

### RBI இல் "பரிவர்த்தனை உரையாடல் " தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

- மத்திய ரிசர்வ் வங்கியானது UPI இல் "பரிவர்த்தனை உரையாடல்" என்ற புதுமையான கட்டண முன்னெடுப்பு முறையை அறிமுகப்படுத்தும் தீர்மானத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- பாதுகாப்பான சூழலில் முக்கிய கொடுப்பு பரிவர்த்தனைகளைத் தொடங்கவும் அதனை முழுமையாக முடிக்கவும் ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் அதனைப் பொது பயனர்கள் செயற்கை நுண்ணறிவு இயங்குதளத்தின் வாயிலாக உரையாடலில் செய்திகளைப் பெறுவதை நோக்கமாக கொண்டு இந்த அமைப்பானது வடிவமைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.



### உத்காம் என்ற வலைத்தளத்தை RBI அறிமுகப்படுத்தியுள்ளது.

- இந்தியாவில் உள்ள வங்கிகள் அனைத்திலும் உரிமை கோரப்படாத டெபாசிட்டுகளுக்கான பணமதிப்பு தேடலை எளிதாக்கும் வகையில், மத்திய ரிசர்வ் வங்கியானது ஒரு மையப்படுத்தப்பட்ட உத்காம் என்ற வலைத்தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- எந்த ஒரு வங்கியின் வாடிக்கையாளர்கள் தங்கள் கைபேசி எண்ணைப் பயன்படுத்தி 'உத்கம்' (உரிமை பெறாத வைப்புத்தொகை – தகவல்களைப் பெறுவதற்கான நுழைவாயில்) என்ற தளத்தில் பதிவு செய்யலாம் என்றும் இதன் மூலம் அந்த தொகையினைப் பெறுவதை எளிதாக்கும் நோக்கில் இந்த வலைத்தளமானது வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் RBI குறிப்பிட்டுள்ளது
- 2023 இல் இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகமானது 800 பில்லியன் டாலர்களைக் தாண்டியுள்ளது : GTRI அறிக்கை.
- இந்தியாவின் பணி மற்றும் சேவைப் பிரிவுகளின் ஆரோக்கியமான வளர்ச்சியானது, 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில்(ஜனவரி – ஜூன்), உலகளாவிய தேவையில் மந்தநிலை நிலவிய போதிலும், இந்தியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதி மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகளின் ஒட்டுமொத்த மதிப்பானது 800 பில்லியன் டாலர்களைக் கடந்துள்ளது என்று GTRI அமைப்பானது தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

- உலகளாவிய வர்த்தக ஆராய்ச்சி முன்முயற்சி என்ற அமைப்பின்(GTRI) பகுப்பாய்வின்படி, ஜனவரி-ஜூன் வரையிலான 2022 ஆம் ஆண்டிற்கான 379.5 பில்லியன் அமெரிக்க டாலர்களிலிருந்து, இந்த ஆண்டு ஜனவரி-ஜூன் வரையிலான காலத்தில் பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி 1.5 சதவீதம் அதிகரித்து 385.4 பில்லியன் டாலர்களாக உயர்ந்துள்ளது என அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- 2025க்குள் இந்தியா 150 பில்லியன் டாலர் உயிரியல் பொருளாதாரத்தை அடைய இலக்கு – மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங்.
- 2025 ஆம் ஆண்டிற்குள் இந்தியா கிட்டத்தட்ட 150 பில்லியன் டாலர் உயிரி பொருளாதாரத்தை அடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய தொழில்நுட்பத்துறை மற்றும் அறிவியல்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.
- மத்திய உயிரித்தொழிநுட்பவியல் துறை மற்றும் அமெரிக்கா-தேசிய அறிவியல் அறக்கட்டளைக்கும் இடையேயான புது டெல்லியில் ஒப்பந்தம் மேற்கொள்ளும் நிகழ்ச்சியில் இவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.
- உலகளாவிய உயிரித்தொழிநுட்பவியல் துறையில் இந்தியா கிட்டத்தட்ட 3 முதல் 5 சதவீத சந்தைப் பங்கைக் கொண்டுள்ளது என்றும் இதை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை மத்திய அரசு மேற்கொள்ளும் என அவர் தெரிவித்துள்ளார்.

# திட்டங்கள்

## 'எனது மண், எனது தேசம்' இயக்கம் தொடங்கத் திட்டம்.

- இந்திய நாட்டின் விடுதலைக்காக உயிர்த் தியாகம் செய்த மாபெரும் வீரர்களைப் போற்றுதல் மற்றும் நினைவுக்கூறும் வகையில் 'எனது மண், எனது தேசம்' என்ற இயக்கமானது தொடங்கப்படும் நடைபெற்ற 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் பிரதமா் மோடி அறிவித்துள்ளாா்.
- சுதந்திரத்தின் மதிப்பை உணர்ந்து அதைப் பெற்றுத்தந்த அந்த வீரர்களின் நினைவாகவும் அந்த இயக்கத்தின் கீழ் 'அம்ருத கலசம்' யாத்திரையானது நடத்தப்படும் என்றும் அதன்படி நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 7,500 சிறிய அளவிலான பானைகளில் மண்ணும் கூடவே மரக்கன்றுகளும், செடிகளும் எடுத்து வந்து குறிப்பிட்ட பொது வெளிகளில் நடுவதை நோக்கமாக கொண்டு இந்த முன்னெடுப்பானது வடிவமைக்கப்பட்டுள்ளதாகும்

## மத்திய அமைச்சர் சாகர் சேது திட்டத்தின் கீழ் "துறைமுக சுகாதார அமைப்பை(PHO)" தொடங்கியுள்ளார்.

- மத்திய துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர்(MoPSW) ஸ்ரீ சர்பானந்தா சோனோவால், சாகர் சேது – தேசிய தளவாடங்கள் வலைத்தளங்கள்(கடல்சார்) திட்டத்தின் கீழ் "துறைமுக சுகாதார அமைப்பு (PHO)" தொகுதியைத் தொடங்கி வைத்தார்.
- குடிமக்கள் மற்றும் துறைமுகம் சார்ந்த பணியாளர்களைப் பாதுகாப்பதையும் அவர்களுக்கு நோய் கண்காணிப்பு, சுகாதார ஆய்வு மற்றும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் ஆகியவற்றை முக்கிய காலங்களில் விரைவாக மேற்கொள்ளுவதையும் நோக்கமாகக் கொண்டு இந்த PHO அமைப்பானது வடிவமைக்கப்பட்டுள்ளது என்று மத்திய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## பாரதிய வஸ்த்ரா ஏவம் ஷில்பா கோஷ் வலைத்தளமானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- பிரதமர் திரு மோடி, புது டெல்லியில் 9ஆவது தேசிய கைத்தறி தின கொண்டாட்டத்திற்கு தலைமை தாங்கிய நிலையில் தேசிய நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட 'பார்த்திய வஸ்த்ரா ஏவம் ஷில்பா கோஷ் – என்ற ஜவுளி மற்றும் கைவினைகளின் களஞ்சியம்' என்ற வலைத்தளத்தை (இ-போர்ட்டலைத்) தொடங்கி வைத்துள்ளார்.
- இந்த வலைத்தளமானது ஜவுளி மற்றும் கைவினைப் பொருட்கள் தொடர்பான ஆராய்ச்சிக் கட்டுரைகள், முனைவர் பட்ட ஆய்வறிக்கைகள், வழக்கு ஆய்வுகள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவற்றை தேவைப்படும் தொழில்முனைவோர்களுக்கு உதவும் வகையில் வலைத்தளமானது வடிவமைக்கப்பட்டுள்ளதாகும்.



## ஜல் ஜீவன் சர்வேக்ஷன் 2023' தரவரிசை

- ஜம்மு மற்றும் காஷ்மீர் பிராந்தியத்தின் ஒரு மாவட்டமான ஸ்ரீநகர், '2023 ஆம் ஆண்டிற்கான ஜல் ஜீவன் சர்வேக்ஷன் ' தரவரிசையில் 'முன் ஓட்டப்பந்தய வீரர்கள்' பிரிவில் முதலிடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளது.
- அந்த யூனியன் பிரதேசத்தின் துணைநிலை ஆளுநராக மனோஜ் சின்ஹா, இந்த மாவட்டமானது இதன் பிரிவில் முதல் தரவரிசையைப் பெற்றதற்கும் ஸ்ரீநகர் மாவட்டத்தைச் சிறப்பாக நிர்வாகத்திற்காக DC Sgr முகமட் அய்ஜாஸ் ஆசாத் அவர்களுக்கும் தனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார்.

## PM விஸ்வகர்மா மேம்பாட்டுத் திட்டம்

- நாட்டின் பாரம்பரிய கைவினைஞர்களை ஆதரிப்பதற்காக ரூ.13,000 கோடி மதிப்பிலான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- 13 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டளவில் இந்தியாவின் நகர்ப்புற மற்றும் கிராமப்புற-பாரம்பரிய கைவினைஞர்கள் மற்றும் அவர்களின் திறமையை ஆதரிப்பதற்கான PM விஸ்வகர்மா மேம்பாட்டுத் திட்டத்திற்கு

மத்திய அரசாங்கம் ஆகஸ்ட் 2023 இல் ஒப்புதல் அளித்துள்ளது.

- கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்கள் தங்கள் கைகள் மற்றும் கருவிகளுடன் பணிபுரியும் அவர்களின் பாரம்பரிய திறன்களின் குடும்ப அடிப்படையிலான வாழ்க்கை நடைமுறையை வலுப்படுத்தி அவற்றை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த திட்டமானது வடிவமைக்கப்பட்டுள்ளதாகும். இது 5 ஆண்டு கால திட்டம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## என் வங்காளம், அடிமையாதல் இல்லாத வங்காளம்' என்ற முன்னெடுப்பானது தொடங்கப்பட்டுள்ளது.

- இந்திய குடியரசு தலைவர் திரௌபதி மேற்கு வங்கத்தின் கொல்கத்தாவில் உள்ள ராஜ்பவனில் 'நாஷா முக்த் பாரத் அபியான்' என்ற திட்டத்தின் கீழ் "எனது வங்காளம், அடிமையாதல் இல்லாத வங்காளம்" என்ற முன்னெடுப்பு பிரச்சாரத்தை தொடங்கி வைத்துள்ளார்.
- மன அழுத்தம், குடும்ப அமைதியின்மை மற்றும் பல்வேறு சிக்கல்கள் காரணமாக எந்தவொரு போதைப் பழக்கமும் உருவாகிறது எனவும் அத்தகைய பழக்கத்திலிருந்து இளைஞர்களை வெளி கொண்டு வருவதை நோக்கமாக கொண்டே இந்த முன்னெடுப்பானது தொடங்கப்பட்டுள்ளது என அந்நிகழ்ச்சியில் குடியரசு தலைவர் முர்மு தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## மார்கதர்ஷன் திட்டம் 2023-24 ஐ AICTE தலைவர் அறிமுகப்படுத்தியுள்ளார்.

- தொழில்நுட்பக் கல்விக்கான அகில இந்திய கவுன்சிலின்(AICTE) தொலைநோக்கு முன்முயற்சியான , மார்கதர்ஷன் திட்டம் 2023-24 ஐ AICTE தலைவர், பேராசிரியர் T. G. சீதாராம் அவர்களால் வெற்றிகரமாகத் தொடங்கப்பட்டுள்ளதாகும்.
- அர்ப்பணிப்புள்ள வழிகாட்டுதல் மற்றும் அதன் சீரிய முயற்சிகளை வழங்குவதன் மூலம் நாடு முழுவதும் தொழில்நுட்பக் கல்வியின் தரத்தை உயர்த்துவதை நோக்கமாக கொண்டு இந்த முன்னெடுப்பானது தொடங்கப்பட்டுள்ளது என AICTE தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியாவின் முதல் அதிநவீன 3D அஞ்சல் அலுவலகமானது கர்நாடகாவில் தொடங்கப்பட்டுள்ளது.

- கர்நாடகாவின் தலைநகரமான பெங்களூருவில் இந்தியாவின் முதல் 3டி அமைப்பில் வடிவமைக்கப்பட்ட புதிய தபால் நிலைய கட்டிடத்தை மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தொடங்கி வைத்துள்ளார்.
- இந்த புதிய தபால் அலுவலக கட்டிடத்தின் கட்டுமானமானது லார்சன் & டூப்ரோ நிறுவன உதவியுடனும், தொழில்நுட்ப வழிகாட்டுதலை ஐஐடி மெட்ராஸ் உதவியுடனும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இது நகரின் கேம்பிரிட்ஜ்-லேஅவுட்டில் கிட்டத்தட்ட 1,021 சதுர அடியில் கட்டப்பட்ட 3டி அமைப்பாகும்.

## ஆண்டு திறன் மேம்பாட்டு திட்டம்

- பஞ்சாயத்து ராஜ் மற்றும் மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சர் கிரிராஜ் சிங் நாட்டின் தலைநகரமான புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தனது அமைச்சகத்தின் "வருடாந்திர திறன் மேம்பாட்டு திட்டத்தைத்" தொடங்கி வைத்துள்ளார்.
- இந்த திட்டம் என்பது தனிநபர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும் அதற்கு உதவும் வகையிலான வடிவமைக்கப்பட்ட ஒரு விரிவான வரைபட மூலோபாய ஆவணம் என்று அந்த நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். மேலும் இது மத்திய அரசின் திறன் மேம்பாடு அதிகாரிகளின் பணித்திறனை அதிகரிக்கும் மற்றும் பணியின் தன்மையில் உள்ள குறைபாடுகளை நீக்குவதை நோக்கமாக கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## மேரா பில் மேரா அதிகார்

- அனைத்து விற்பனை-வாங்குதல்களுக்கும் பில்களைக் கேட்கும் பயனர் மற்றும் வாடிக்கையாளர்களின் கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் வகையில், 'மேரா பில் மேரா அதிகார்' என்ற பெயரில் ஒரு முக்கிய முன்னெடுப்பு ஊக்கத் திட்டத்தை மத்திய அரசாங்கமானது அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது மத்திய அரசு மற்றும் மாநில அரசால் இணைந்து மேற்கொள்ளப்படுகிறது. மேலும் இந்த முன்னோடி திட்டமானது செப்டம்பர் 1, 2023 அன்று தொடங்கப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- இந்த திட்டமானது முதலில் புதுச்சேரி, தாத்ரா நகர் ஹவேலி மற்றும் அசாம், டாமன் & டையூ, குஜராத் & ஹரியானா ஆகிய மாநிலங்களில் தொடங்கப்படும் என்றும் அதன் வளர்ச்சியை ஒப்பிட்டு மற்ற மாநிலங்களில் மேம்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜூலை 2023 மாதமானது இதுவரை உலகின் மிக வெப்பமான மாதமாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- ஐரோப்பிய ஒன்றிய அமைப்பின் கோப்பர்நிக்கஸ் காலநிலை மாற்ற மன்றமானது, உலகளவில் அதிகரித்து வரும் சுற்றுசூழல் மாற்றம் மற்றும் காலநிலை மாற்ற நெருக்கடியின் தெளிவான ஆய்வின்படி
- ஜூலை 2023 மாதமானது இதுவரை உலகளவில் பதிவுசெய்யப்பட்ட மிக அதிகமான வெப்பமான மாதமாக சமீபத்திய அறிவிப்பில் உறுதிப்படுத்தியுள்ளது.
- இந்த வெப்பநிலை அதிகரிப்பானது உலகின் மிக ஆபத்தான போக்கைக் குறிக்கிறது என்றும் இந்த நிலை தொடர்ந்து நிகழும் பட்சத்தில் உலகின் உள்ள பொது மக்கள் வரும் காலங்களில் மிக கடுமையான சூழ்நிலையில் பாதிக்கப்படுவார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளது

# இராணுவச் செய்திகள்

## இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகமானது கடற்படையுடன் கூடிய இருதரப்பு பயிற்சியை. மேற்கொண்டது

- INS விசாகப்பட்டினம் மற்றும் INS திரிகண்ட் ஆகிய இரண்டு இந்திய கடற்படைக் கப்பல்களும் UAE இன் துபாயில் உள்ள ரஷித் துறைமுகத்திற்கு வந்தடைந்துள்ளன. ஆகஸ்ட் 8 முதல் ஆகஸ்ட் 11 வரை இந்தப் பயிற்சியானது நடைபெற்றது.
- இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் இடையிலான இருதரப்பு கடற்படை பயிற்சியான 'சயீத் தல்வார்' ஆனது அந்த இரு நாடுகளுக்கிடையேயான பிராந்திய பாதுகாப்பிற்கு பங்களிக்கும் வகையிலும், அதன் ஒருங்கிணைப்பை மேம்படுத்தும் வகையிலும் இந்த கூட்டு ராணுவ கடற்படை பயிற்சியானது தொடங்குகிறது.



## 2023 ஆம் ஆண்டிற்கான மலபார் கூட்டு கடற்படை பயிற்சி.

- இந்திய கடற்படையின் உள்நாட்டு போர்க்கப்பல்களான INS கொல்கத்தா மற்றும் INS சஹ்யாத்ரி ஆகியன ஜப்பான் கடல்சார் தற்காப்பு படை (JMSDF) மற்றும் அமெரிக்க கடற்படை(USN) கப்பல்கள் மற்றும் விமானங்களுடன் இணைந்து ராயல் ஆஸ்திரேலிய கடற்படையுடன்(RAN)
- "மலபார்" என்ற கூட்டு ராணுவ கடற்படை பயிற்சியை நடைபெற்றது
- இந்த கூட்டு கடற்படை பயிற்சியானது ஆகஸ்ட் 11 முதல் ஆகஸ்ட் 21 வரை ஆஸ்திரேலியாவின் சிட்னியில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மலபார் கடற்படை பயிற்சியானது 1992 ஆம் ஆண்டு இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய இருநாட்டு கடற்படைக்கும் இடையேயான இருதரப்பு கூட்டு கடற்படை பயிற்சியாக தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## எதிரி நாட்டின் ரேடார்களில் சிக்காத வகையிலான ஐஎன்எஸ் விந்தியகிரி

## போர்க்கப்பலை இந்திய குடியரசு தலைவர் அறிமுகப்படுத்தியுள்ளார்.

- மேற்கு வங்கத்தின் கொல்கத்தாவில் உள்ள கிடர்போர் பகுதி-ஹூக்ளி ஆற்றின் கரையில் உள்ள கார்டன் ரீச் கப்பல் காட்டும் தளத்தில் (GRSE) இந்திய குடியரசு தலைவர் திரௌபதி முர்மு இந்தியாவின் புதிய போர்க்கப்பலான 'ஐஎன்எஸ் விந்தியகிரி'யை அறிமுகப்படுத்தியுள்ளார்.
- கர்நாடகாவில் உள்ள மலைத்தொடரின் பெயரால் அழைக்கப்பட்ட இந்த மேம்பட்ட எதிரி நாட்டின் ரேடார்களில் சிக்காத வகையிலான ஐஎன்எஸ் விந்தியகிரி போர்க்கப்பலானது,
- "புராஜெக்ட் 17ஏ" போர்க் கப்பல்களின் ஆறாவது பதிப்பு கப்பல் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.




## எகிப்தின் முப்படைப் பயிற்சியான BRIGHT STAR-23 இல் இந்திய விமானப்படை பங்கேற்க திட்டம்.

- எகிப்து நாட்டின் கெய்ரோ (மேற்கு) விமானத் தளத்தில் பலதரப்பு முப்படைப் பயிற்சியான BRIGHT STAR-2023 இல் பங்கேற்பதற்காக இந்திய விமானப்படை (IAF) எகிப்து நாட்டிற்கு சென்றுள்ளது.
- இந்த பயிற்சியானது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுவதாகும். மேலும் இந்த பயிற்சியானது ஆகஸ்ட் 27 முதல் செப்டம்பர் 16, 2023 வரை நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது.
- கூட்டு நடவடிக்கைகளின் மூலம் பாதுகாப்பு திட்டமிடல் மற்றும் அதன் செயல்பாட்டை விரைவுப்படுத்துதல் ஆகியவற்றை முக்கிய நோக்கமாக கொண்டு இந்த பயிற்சியானது நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



## 7 சிங்கப்பூர் செயற்கைக்கோள்களை இஸ்ரோ வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.



- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின்(ISRO) PSLV-C56 ராக்கெட் ஆனது சிங்கப்பூரின் DS-SAR செயற்கைக்கோள் உட்பட ஆறு இணை பயணிகள் பேலோடுகளை உள்ளடக்கிய தொகுப்பினை ISRO வின் ஏவுதளமான ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.
- இது கோர் தனியான அமைப்பில் பிஎஸ்எல்வியின் 17வது மற்றும் பிஎஸ்எல்வியின் 58வது விமானம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். PSLV-C56 / DS-SAR என்பது சிங்கப்பூரின் ST இன்ஜினியரிங் நிறுவனத்திற்கான "நியூஸ்பேஸ் இந்தியா அமைப்பின்(NSIL) பிரத்யேக மற்றும் முதன்மை வணிகப் பணியாகும்". DS-SAR என்பது ராடார் இமேஜிங் புவி கண்காணிப்பு சிறப்பு பணி செயற்கைக்கோள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## இஸ்ரோ மிகப்பெரிய செயற்கைக்கோள் தொழில்நுட்ப நுணுக்கத்தை தனியாருக்கு மாற்ற திட்டமிட்டுள்ளது.

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது(இஸ்ரோ) அதன் அதிநவீன IMS-1 செயற்கைக்கோள் ஊர்தி தொழில்நுட்பத்தை ஆல்பா டிசைன் டெக்னாலஜிஸ் என்ற தனியார் நிறுவனத்திற்கு தொழில்நுட்ப பரிமாற்றம்(technology transfer) மூலம் மாற்றியுள்ளதாக தனது சமீபத்திய அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.
- இஸ்ரோவின் முக்கிய வணிகப் பிரிவான நியூஸ்பேஸ் இந்தியா அமைப்பு (என்எஸ்ஐஎல்) மூலம், தனியார் விண்வெளித் துறையை மேலும் மேம்படுத்தும் முயற்சியின் ஒரு முக்கிய பகுதியாக இந்த பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவிக்கபட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தலைமுறை காந்த அதிர்வு இமேஜிங்(MRI) ஒளிப்பதிவு இயந்திரத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

- அறிவியல் & தொழில்நுட்பம், அணுசக்தி,பொது குறைகள், ஓய்வூதியத்திற்கான மத்திய இணை அமைச்சர் (தனி பொறுப்பு) டாக்டர் ஜிதேந்திர சிங், இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட, இலகுரக, மலிவு மற்றும் அதிவேக(1.5 டெஸ்லா) அடுத்த தலைமுறை காந்த அதிர்வு இமேஜிங் (MRI) ஒளிப்பதிவு இயந்திரத்தை புதுதில்லியில் அறிமுகப்படுத்தியுள்ளார்.
- இது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஒளிப்பதிவு இயந்திரத்தின் குறைவான விலையின் மூலம் சாமானியர்கள் எளிதாக வாங்க முடியும் என மத்திய அமைச்சர் தெரிவித்துள்ளார். மேலும் இது "மேக் இன் இந்தியா – மேட் ஃபார் தி வேர்ல்ட்" என்ற முன்னெடுப்பின் முக்கிய பகுதியாக பார்க்கப்படுகிறது.

## தாவர உண்ணி வகையை சேர்ந்த டைனோசரின் பழமையான புதைபடிவங்கள் ராஜஸ்தான் மாநிலத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.



- இந்திய புவியியல் ஆய்வு மையம் (GSI) மற்றும் ஐஐடி-ரூர்க்கி பிரிவு ஆகியவற்றின் விஞ்ஞானிகள் இணைந்து ராஜஸ்தான் மாநிலத்தின் ஜெய்சால்மரில் "நீண்ட கழுத்து கொண்ட மற்றும் தாவர உண்ணியான" டிக்ரேயோசொரிட் வகையை சேர்ந்த டைனோசரின் மிக பழமையான புதைபடிவ எச்சங்களை கண்டுபிடித்துள்ளனர்.
- இதன் மூலம் இந்தியா நிலப்பரப்பானது டைனோசர் பரிணாம வளர்ச்சியின் மிக முக்கிய தளமாக இருந்தது என்றும் கிட்டத்தட்ட 167 மில்லியன் ஆண்டுகள் பழமையான இந்த படிவமானது மேற்கு இந்தியாவின்

ராஜஸ்தானின் தார் பாலைவனத்தைக் குறிக்கும் வகையில், "தாரோசரஸ் இண்டிகஸ்" என்று பெயரிடப்பட்டுள்ளதாக GSI தெரிவித்துள்ளது.

## லூனா-25

- 47 ஆண்டுகளுக்கு பிறகு ரஷ்யாவின் நிலவு பயணத்திற்கான "லூனா 25" திட்டத்தை ஆகஸ்ட் 11 அன்று அந்நாடு அறிவித்துள்ளது. ரஷ்யாவின் தென்தூர கிழக்கில் உள்ள Vostochny என்ற ஏவுதளத்தில் இருந்து இந்த Luna-25 விண்கலமானது Soyuz-2 Fregat ராக்கெட்டில் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது
- நிலவில் மென்மையாக தரையிறங்குவதற்கான தொழில்நுட்பத்தை மெருகூட்டுவதை நோக்கமாக கொண்டு இந்த திட்டமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது என ரஷ்யா விண்வெளி நிறுவனமான ROSCOSMOS அறிவித்துள்ளது. இந்தியாவானது சமீபத்தில் தனது மூன்றாவது நிலவு பயணமான சந்திராயன் 3 ஆனது செலுத்தப்பட்டுள்ள நிலையில் இந்த ரஷ்யாவின் முடிவானது உலக விஞ்ஞானிகளிடையே முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

## ரஷ்யாவின் நிலவுப் பயணமான லூனா-25 விண்கலம் நிலவில் மோதி விபத்துக்குள்ளானது.

- ரஷ்யாவின் நிலவு பயணத்திற்கான விண்கலம் லூனா -25 ஆனது தனது கட்டுப்பாட்டை இழந்து நிலவில் மோதி விபத்துக்குள்ளானது என்று ரஷ்ய விண்வெளி ஆய்வு நிறுவனமான ரோஸ்கோஸ்மோஸ் தனது அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.
- இந்த விண்கலத்திற்கு தரையிறங்குவதற்கு முந்தைய நீள்வட்ட சுற்றுப்பாதையை உருவாக்குவதற்கான உந்துவிசையானது வழங்கப்பட்டதை தொடர்ந்து மாஸ்கோ நேரம் சுமார் 14:57 மணியளவில் விண்கலத்துடனான இணைப்பு தடைப்பட்டது. எனவே அது நிலவில் மோதி விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. நமது நாட்டிற்கான நிலவு பயணமான சந்திராயன் 3 ஆனது ஆகஸ்ட் 23 ஆம் நாளானது நிலவில் தரையிறங்க உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## சூரியனை ஆய்வு செய்வதற்கான முதல் விண்வெளி திட்டமான ஆதித்யா-எல்1 ஐ அடுத்த மாதம் ஏவ திட்டம்.

- சூரியனை ஆய்வு செய்வதற்கான இந்தியாவின் முதல் விண்வெளி செயற்கைக்கோளான "ஆதித்யா-எல் 1"-ஐ செப்டம்பர் மாதம் விண்ணில் செலுத்த திட்டமிட்டுள்ளதாக இஸ்ரோ தனது சமீபத்திய அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.
- பெங்களூரு ISRO செயற்கைக்கோள் தொழில்நுட்ப மையத்தில் உருவாக்கப்பட்ட இந்த செயற்கைக்கோளானது இஸ்ரோவின் முதன்மையான ஸ்ரீஹரிகோட்டா ஏவுதளத்திலிருந்து ஏவ உள்ளதாக திட்டமிடப்பட்டுள்ளதாகும். இந்த விண்கலமானது பூமியிலிருந்து கிட்டத்தட்ட 1.5 மில்லியன் கிலோமீட்டர் தொலைவில் உள்ள சூரியன்-பூமி அமைப்பின் "லாக்ரேஞ்ச் புள்ளி — எல் 1" ஐச் சுற்றி ஒரு ஒளிவட்டப் பாதையில் வைக்கப்பட்டு சூரியனை முழுவதுமாக ஆய்வு செய்வதை நோக்கமாக கொண்டு செலுத்தப்பட உள்ளதாகும்.



## AI மூலம் உருவாக்கப்படும் கலைப்படைப்புகள் பதிப்புரிமைப் பாதுகாப்பிற்கு தகுதியற்றவை என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

- வாஷிங்டன் டி.சி.யில் உள்ள அமெரிக்க கூட்டாட்சி நீதிமன்றமானது, எந்த மனித தலையீடும் இல்லாமல் செயற்கை நுண்ணறிவு மூலம் மட்டும் உருவாக்கப்படும் தீர்வுகள் மற்றும் கலைப்படைப்புகளுக்கு அமெரிக்க சட்டத்தின் கீழ் "பதிப்புரிமை பாதுகாப்பு" வழங்க முடியாது என்று முக்கியமான தீர்ப்பை சமீபத்தில் வழங்கியுள்ளது.
- 1976 ஆம் ஆண்டு நிர்வகிக்கப்பட்ட இந்த பதிப்புரிமைச் சட்டமானது ஒரு நபரின் படைப்பின் அங்கீகரிக்கப்படாத நகலெடுப்பதைத் தடுப்பதை நோக்கமாக கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதாகும். இந்த தீர்ப்பானது AI தொழில்நுட்பத்தை மக்கள் அதிகமாக பயன்படுத்துவதை உறுதி செய்வதாக அமைகிறது என பல தொழிநுட்ப வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

## சிவசக்தி புள்ளி- சந்திரயான்-3

- சந்திரயான்-3 நிலவில் லேண்டரின் வெற்றியை நினைவுகூரும் வகையில், விக்ரம் லேண்டர் தரையிறங்கும் இடம் அல்லது அந்த பகுதியானது 'சிவசக்தி புள்ளி' என்று அழைக்கப்படும் என பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.
- பெங்களூருவில் உள்ள இஸ்ரோ டெலிமெட்ரி டிராக்கிங் & கமாண்ட் நெட்வொர்க் மிஷன் கன்ட்ரோல் வளாகத்தில் இந்த முக்கிய மற்றும் வரலாற்று பெயரை பிரதமர் அறிவித்துள்ளார். மேலும் சந்திரயான்-2 விபத்திற்குள்ளான

தளத்தின் பெயரை 'திரங்கா புள்ளி' என்ற பிரதமர் 2019இல் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



## அகில இங்கிலாந்து இளையோர் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய அணியானது வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளது.

- இங்கிலாந்தின் பர்மிங்காம் மாநில பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டிற்கான இங்கிலாந்து இளையோர் பூப்பந்து(பேட்மிண்டன்) சாம்பியன்ஷிப் போட்டியில் பெண்கள் ஒற்றையர் மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவு போட்டிகளில் இந்தியப் அணியின் தாரிணி சூரி மற்றும் ரக்ஷா கந்தசாமி ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளனர்.
- நவி மும்பையைச் சேர்ந்த இரண்டாம் தரநிலை வீராங்கனையான ரக்ஷா கந்தசாமி, கனடாவின் முதல்நிலை வீராங்கனையான ஜாக்கி டென்டிடம் 21-19, 12-21, 11-21 என்ற நேர்புள்ளிகள் கணக்கில் மூன்று ஆட்டங்களில் தோல்வியடைந்து இந்த பதக்கத்தை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 2023 ஆம் ஆண்டிற்கான ஆசிய இளையோர் மற்றும் ஜூனியர் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் தொடரில் கபில் சோனோவால் வெண்கலம் வென்றுள்ளார்.

- இந்திய விளையாட்டு நட்சத்திரம் கபில் சோனோவால் ஆசிய இளைஞர் மற்றும் ஜூனியர் பளு தூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் 102 கிலோ எடைப் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்தார்.
- 16 வயதான அவர் இந்த பதக்கத்தை அடைய மொத்தம் 276 கிலோ (அதாவது 125 கிலோ + 151 கிலோ) தூக்கி மேடையில் இடம் பிடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 17 வயதான டி குகேஷ், சதுரங்க ஜாம்பவானான விஸ்வநாத ஆனந்தை பின்னுக்குத் தள்ளி, இந்தியாவின் முதல் தரவரிசை சதுரங்க விளையாட்டு வீரர் ஆனார்.

- தமிழகத்தை சேர்ந்த 17 வயதான டி. குகேஷ், நேரடி உலக சதுரங்க தொடர் தரவரிசையில் இந்தியாவின் முதல் சதுரங்க விளையாட்டு வீரராக, கிராண்ட்மாஸ்டர் மற்றும் சதுரங்க உலகின் ஜாம்பவனான விஸ்வநாத ஆனந்தின் 37 ஆண்டுகால ஆட்சியை முறியடித்தார்.
- அஜர்பைஜானின் பாகுவில் நடைபெற்ற FIDE உலகக் கோப்பையில் கிளாசிக் ஓபன் பிரிவில் உலகின் 9-வது இடத்திற்கு முன்னேற 2755.9 நேரடி புள்ளிகள் மதிப்பீட்டைப் பெற்றார் மற்றும் 2754.0 மதிப்பெண்களுடன் ஆனந்த் பத்தாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.
- மேலும் ஆனந்த் 1986 ஆம் ஆண்டு முதல் இரண்டு முறை இந்த உலக தரவரிசையில் இரண்டாவது இடத்திற்கு மட்டுமே சரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பெண்டலா ஹரிகிருஷ்ணா மற்றும் ஆனந்திற்குப் பிறகு உலகின் முதல் 10 இடங்களுக்குள் நுழைந்த மூன்றாவது இந்தியர் என்ற அந்தஸ்தை இவர் பெற்றுள்ளார்.



## 132வது துராண்ட் கோப்பை

- 132வது துராண்ட் கோப்பை தொடரானது மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் அசாம் மாநிலத்தின் கோக்ரஜார் மாவட்டத்தில் உள்ள SAI மைதானத்தில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
- அசாம் மாநில அரசாங்கம் மற்றும் போடோ பிராந்திய கூட்டமைப்பு மற்றும் இந்திய ராணுவம் இணைந்து இந்த மாபெரும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## உலக வில்வித்தை சாம்பியன்ஷிப்

- 2023 ஆம் ஆண்டிற்கான உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் தொடரின் இறுதி போட்டியில் பர்னீத் கவுர், ஜோதி சுரேகா வென்னம் மற்றும் அதிதி சுவாமி அடங்கிய இந்திய மகளிர் கூட்டு அணியானது மெக்சிகோ நாட்டின் அணியை வீழ்த்தி தங்கப் பதக்கத்தை வென்றுள்ளது.
- இந்த இறுதிப் போட்டியில் மெக்சிகோ அணியை இந்திய அணியானது 235-229 என்ற புள்ளிகள்

கணக்கில் வீழ்த்தி இந்த வரலாற்று வெற்றியை பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1981ல் இத்தாலியில் நடைபெற்ற உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் தொடரில் இந்திய அணி முதல்முறையாக அறிமுகமான பிறகு, உலக சாம்பியன் பட்டத்தை பெற்றது இதுவே முதல் முறை என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.



## உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் தனிநபர் பிரிவில் உலக பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்ற அந்தஸ்தை அதிதி பெற்றுள்ளார்.

- ஜெர்மனியின் பெர்லினில் நடைபெற்ற உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டியில் தனிநபர் பிரிவில் உலக சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்ற அந்தஸ்தை அதிதி சுவாமி பெற்றுள்ளார்.
- இந்த இறுதி போட்டியில் 149-147 என்ற புள்ளிகள் கணக்கில் மெக்சிகோ நாட்டின் ஆண்ட்ரியா பெசெராவை தோற்கடித்து இதன் வெற்றியை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## இங்கிலாந்தில் நடைபெற்ற நான்கு நாடுகளின் பாரா பேட்மிண்டன் தொடரில் கடம்-பகத் ஜோடியானது தங்கம் வென்றுள்ளது.

- உலக தரவரிசையில் முதலிடம் பிடித்த ஆடவர் இரட்டையர் ஜோடியான சுகந்த் கதம் மற்றும் பிரமோத் பகத், இங்கிலாந்து நாட்டின் ஷெஃபீல்டு நகரில் உள்ள நான்கு நாடுகளின் கூட்டு பாரா-பேட்மிண்டன் சர்வதேச போட்டியில் SL3 மற்றும் SL4 பிரிவில் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளனர்.



## 2023 ஆம் ஆண்டிற்கான காமன்வெல்த் இளைஞர் விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் ஷோன் கங்குலி வெள்ளி பதக்கத்தை வென்றுள்ளார்.

- ஸ்பெய்னின் டிரின்பாகோவில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டிற்கான காமன்வெல்த் இளைஞர் விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் அனுப்ரியா வள்ளியோட் மற்றும் ஷோன் கங்குலி ஆகியோர் முறையே இளையோருக்கான 400 மீட்டர் தனிநபர் மெட்லே நீச்சல் போட்டியில் வெண்கலம் மற்றும் வெள்ளி பதக்கங்களை வென்றுள்ளனர்.
- கங்குலி தனது சிறந்த இந்திய நேரமான 4:25.47 வினாடிகளில் இங்கிலாந்து நாட்டின் ரீஸ் கிரேடியை (4:24:16 வினாடிகள்) பின்னுக்குத் தள்ளி, இந்த பதக்கத்தை தக்க வைத்து கொண்டுள்ளார் என்பது குறிப்பிடக்கதாகும்.



## ஜானிக் சின்னர் தனது முதல் கனடிய ஓபன் பட்டத்தை வென்றுள்ளார்.

- ஆகஸ்ட் 13 அன்று நடைபெற்ற கனடா ஓபன் சாம்பியன்ஷிப் தொடரில் ஆஸ்திரேலிய வீரர் அலெக்ஸ் டி மினாரை வீழ்த்தி 6-4 6-1 என்ற புள்ளிகள் கணக்கில் இத்தாலிய வீரரான ஜானிக் சின்னர் தனது முதல் மாஸ்டர்ஸ் 1000 பட்டத்தை வென்றுள்ளார்.



## 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 61 கிலோ மல்யுத்த பிரிவில் இந்தியாவின் மோகித் உலக சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

- ஜோர்டான் நாட்டில் உள்ள அம்மன் நகரப்பகுதியில் நடைபெற்ற ஆண்களுக்கான 20 வயதுக்குட்பட்டோருக்கான 61 கிலோ மல்யுத்த பிரிவில் இந்திய வீரர் மோகித் குமார் ஆகஸ்ட் 2023 இல் உலக சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

- இந்த இறுதிப் போட்டியில் மோஹித், ரஷ்யாவை சேர்ந்த எல்டார் அக்மதுடினோ என்ற வீரரை 9-8 என்ற புள்ளிகள் கணக்கில் தோற்கடித்து இந்த பட்டத்தை வென்றுள்ளார். மேலும் இதன்மூலம் இப்பட்டதை வென்ற நான்காவது இந்திய மல்யுத்த வீரர் என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளார்.
- 2023 ஆம் ஆண்டிற்கான உலகக் கோப்பையில் இந்திய வில்வித்தை வீரர்கள் வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

## 2023 ஆம் ஆண்டிற்கான உலகக் கோப்பையின் 4ஆம் கட்டத்தின் ஆடவர் மற்றும் மகளிர் அணி பிரிவுகளில் இந்திய ரிகர்வ் வில்வித்தை வீரர்கள் இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

- இந்தப் போட்டியில் இந்திய ஆடவர் ரிகர்வ் அணி அதானு தாஸ், தீரஜ் பொம்மதேவரா, துஷார் ஷெல்கே ஆகியோர் ஸ்பெயினின் ஆன்ட்ரஸ் டெமினோ, பாப்லோ அச்சா, யுன் சான்செஸ் ஜோடியை 6-2 (54-56, 57-55, 56-54, 57-55) என்ற புள்ளிகள் கணக்கில் தோற்கடித்து இந்த வெண்கல பதக்கத்தைத் தக்கவைத்துக் கொண்டனர்.

## 2023 ஆம் ஆண்டிற்கான ஆசிய இளையோர் ஸ்குவாஷ் தொடரில் இந்தியா தங்கம் வென்றுள்ளது.

- சீனாவின் டேலியன் நகரில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டிற்கான ஆசிய இளையோர் ஸ்குவாஷ் தனிநபர் சாம்பியன்ஷிப் தொடரில் U-17 பிரிவில் இந்தியாவின் விளையாட்டு வீரரான அனாஹத் சிங் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.



## 2023 ஆம் ஆண்டிற்கான ISSF உலக சாம்பியன்ஷிப் தொடரில் இந்தியாவின் வீரரான மெஹுலி வெண்கலம் வென்றுள்ளார்.



- அஜர்பைஜான் நாட்டின் பாகுவில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டிற்கான ISSF உலக சாம்பியன்ஷிப் தொடரில் பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவு போட்டியில் இந்தியாவின் மெஹுலி கோஷ் வெண்கலத்தை வென்றுள்ளார்.

## FIFA மகளிர் உலகக் கோப்பை தொடரை ஸ்பெயின் அணி கைப்பற்றியுள்ளது.

- 2023 ஆம் ஆண்டிற்கான FIFA மகளிர் உலகக் கால்பந்து கோப்பை பட்டத்தை, ஸ்பெயின் அணியானது ஆஸ்திரேலியாவின் சிட்னியில் நடைபெற்ற இறுதி போட்டியில் முதன்முறையாக இங்கிலாந்தை 1-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து வரலாற்று சாதனை படைத்துள்ளது.
- லா ரோஜா என்றழைக்கப்படும் ஸ்பெயின் நாட்டின் தேசிய கால்பந்து அணியானது, ஜெர்மனிக்குப் பிறகு, பெண்கள் மற்றும் ஆண்கள் உலகக் கால்பந்து கோப்பைகளை வென்ற இரண்டாவது நாடு என்ற அந்தஸ்தை பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## FIDE உலகக் கோப்பையில் அரையிறுதிக்குச் செல்லும் இரண்டாவது இந்தியர் என்ற அந்தஸ்த்தை ஆர்.பிரக்ஞானந்தா பெறுகிறார்.



- FIDE உலகக் கோப்பையில் அரையிறுதிக்குச் செல்லும் இரண்டாவது இந்தியர் அல்லது விஸ்வநாதன் ஆனந்துக்குப் பிறகு FIDE உலகக் கோப்பையின் அரையிறுதிக்கு செல்லும் முதல் இந்தியர் என்ற அந்தஸ்தை தமிழகத்தை சேர்ந்த ஆர்.பிரக்ஞானந்தா சமீபத்தில் பெற்றுள்ளார்.
- தற்போது அஜர்பைஜான் நாட்டின் பாகுவில் நடைபெற்று வரும் 2023 ஆம் ஆண்டிற்கான FIDE உலகக் கோப்பையில் தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இந்த அந்தஸ்தை பெற்றுள்ளார். இந்திய செஸ் கூட்டமைப்பு தனது பாராட்டுகளை தெரிவித்துள்ளது.

## 2023 ஆம் ஆண்டிற்கான தேசிய இளையோருக்கான நீர்வாழ் சாம்பியன்ஷிப் தொடரில் ராணா பிரதாப் தங்கம் வென்றுள்ளார்.

- ஒடிஷாவின் தலைநகரமான புவனேஸ்வரில் 2023 ஆம் ஆண்டிற்கான 39வது சப் ஜூனியர் மற்றும் 49வது தேசிய இளையோருக்கான நீர்வாழ் சாம்பியன்ஷிப் தொடரில் ராணா

பிரதாப் ஜார்கண்ட்டின் முதல் தனிநபர் தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

- மேலும் இவர் பகுதி I ஆண்களுக்கான 200மீ பிரிவில் பரபரப்பான நீச்சல் திறமையுடன் 2:21.88 நிமிடங்களில் புதிய மற்றும் நாட்டின் தேசிய சாதனையைப் படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கேலோ இந்தியா மகளிர் தொடரானது அதிகாரப்பூர்வமாக அஸ்மிதா மகளிர் லீக் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது.

- கேலோ இந்தியா மகளிர் லீக் தொடரானது அதிகாரப்பூர்வமாக “அஸ்மிதா மகளிர் லீக்” என்று இனிமேல் அழைக்கப்படும் என்று மத்திய விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள்த்துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் அறிவித்துள்ளார்.
- அஸ்மிதா என்பது பெண்களை விளையாட்டு துறையில் அவர்களின் செயல்பாட்டின் மூலம் ஊக்குவிப்பதன் நோக்கத்தை குறிக்கிறது. எந்தவொரு அரசு பள்ளி, கல்லூரி, அரசு அல்லது தனியார் நிறுவனமும் இந்த ‘அஸ்மிதா மகளிர் லீக்’ தொடரை நடத்தவும், கேலோ இந்தியாவின் விளையாட்டு சிறப்பை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என மத்திய அமைச்சர் தெரிவித்துள்ளார்.




## 2023 ஆம் ஆண்டிற்கான சதுரங்க உலகக் கோப்பையில், இந்தியாவின் ஆர். பிரக்ஞானந்தா வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.



- அஜர்பைஜான் நாட்டின் தலைநகரமான பாகுவில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டிற்கான FIDE சதுரங்க உலகக் கோப்பை தொடரில் தமிழகத்தை சேர்ந்த ஆர். பிரக்ஞானந்தா வெள்ளி வென்றுள்ளார். மேலும் இந்த தொடரில் நார்வேயின் மேக்னஸ் கார்ல்சன் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- “உலக கோப்பை இறுதிப் போட்டிக்கு வந்த இரண்டாவது இந்தியர்” என்ற அந்தஸ்தை இவர் படைத்துள்ளார். இதற்கு முன் விஸ்வநாதன் ஆனந்த் உலக கோப்பை இறுதி போட்டிக்கு வந்த முதல் நபர் என்ற பட்டத்தை வைத்துள்ளார் என்பது சிறப்பு வாய்ந்தததாக பார்க்கப்படுகிறது.

## 2023 ஆம் ஆண்டிற்கான தேசிய சதுரங்க சாம்பியன்ஷிப்பை எஸ்பி சேதுராமன் வென்றுள்ளார்.

- 2023 ஆம் ஆண்டிற்கான மற்றும் 60-வது தேசிய சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டியில் கிராண்ட்மாஸ்டர் எஸ்.பி.சேதுராமன் தனது சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.
- பெட்ரோலியம் விளையாட்டு மேம்பாட்டு கவுன்சிலை சேர்ந்த இவர், ஒன்பதாவது மற்றும் இறுதிச் சுற்றில் 9.5 புள்ளிகளுடன் இந்த பட்டத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளார். மேலும் இந்த பட்டத்தை இவர் இரண்டாவது முறையாக வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர் 2014 இல் முதல் முறையாக சாம்பியன்ஷிப் விருதை வென்றுள்ளார். இவர் வெற்றிக்கான 6,00,000 ரொக்கப் பரிசை பெற்றுள்ளார்.



## 2023 ஆம் ஆண்டிற்கான உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற அந்தஸ்தை பெறுகிறார்.



- ஹங்கேரி நாட்டின் புடாபெஸ்டில் 2023 ஆம் ஆண்டிற்கான உலக தடகள சாம்பியன்ஷிப் தொடரின் இறுதி போட்டியில் நாட்டின் புகழ்பெற்ற ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா இந்தியாவிற்கு முதல் தங்கத்தினை வென்று தந்துள்ளார்.
- உலக தடகள சாம்பியன்ஷிப் தொடரின்

ஆண்களுக்கான ஈட்டி எறிதல் இறுதிப் போட்டியில் இவர் 88.17 மீட்டர் தூரம் எறிந்து இந்த பதக்கத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளார் எனது குறிப்பிடத்தக்கதாகும்.

## உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் தொடரில் பதக்கம் வென்ற 5வது இந்தியர் என்ற அந்தஸ்தை ஹெச்.எஸ்.பிரணாய் பெறுகிறார்.

- 2023 ஆம் ஆண்டிற்கான உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் வரலாற்றில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் பதக்கம் வென்ற ஐந்தாவது இந்தியர் என்ற அந்தஸ்தை புகழ்பெற்ற பேட்மிண்டன் வீரரான ஹெச்எஸ் பிரணாய் பெற்றுள்ளார்.
- தாய்லாந்து நாட்டின் வீராங்கனை குன்லவுட் விடிட்சார்னிடம் 21-18, 13-21, 14-21 என்ற புள்ளிகள் கணக்கில் பிரணாய் தோல்வியடைந்து வெண்கலப் பதக்கத்தை உறுதி செய்துள்ளார். இதன் மூலம் உலக பேட்மிண்டன் வரலாற்றில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியா தற்போது நான்கு வெண்கலம் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கங்களை தக்க வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



## 2023 ஆம் ஆண்டிற்கான U20 உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் தொடரில் பிரியா மாலிக் தங்கம் வென்றுள்ளார்.

- ஜோர்டான் நாட்டில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டிற்கான U20 உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் தொடரில் இந்திய வீராங்கனையான பிரியா மாலிக் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- இந்த வெற்றியின் மூலம் இந்த U20 உலக சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்ற இந்தியாவின் இரண்டாவது பெண் என்ற அந்தஸ்தை பெறுகிறார். இதற்கு முன்பாக கடந்த ஆண்டு மல்யுத்தத்தில் இளையோருக்கான உலக பட்டத்தை வென்ற இந்தியாவின் முதல் பெண்மணி ஆண்டிம் பங்கால் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## உலக சாம்பியன்ஷிப் தொடரில் இந்திய ஏர் பிஸ்டல் அணியானது வெண்கலம் வென்றுள்ளது.

- 2023 ஆம் ஆண்டிற்கான ISSF உலக சாம்பியன்ஷிப் தொடரில், சரப்ஜோத் சிங், ஷிவா நர்வால் மற்றும் அர்ஜுன் சிங் சீமா ஆகியோர் அடங்கிய இந்திய ஆடவர் அணியானது 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் வெண்கலம் வென்றுள்ளது.
- இவர்களின் மொத்த மதிப்பெண்ணானது 1,734 உடன், வெள்ளிப் பதக்கத்தை வென்ற ஜெர்மனியை விட ஒன்பது புள்ளிகள் பின்தங்கி இந்த பதக்கத்தை தக்கவைத்து கொண்டுள்ளது. மேலும் இந்த தொடரில் சீனா நாட்டின் அணியானது தங்கப் பதக்கம் வென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## பிரதமர் மோடி அவர்களுக்கு மதிப்புமிக்க லோகமான்ய திலக் தேசிய விருதானது வழங்கப்பட உள்ளது.




- இந்திய பிரதமர் மோடி அவர்களுக்கு மகாராஷ்டிரா மாநிலத்தின் புனேவில், நாட்டின் முன்னேற்றத்திற்காக அவர் ஆற்றிய மிக சிறந்த பங்களிப்பு மற்றும் மேன்மைக்காக அவருக்கு மதிப்புமிக்க "லோகமான்ய திலக் தேசிய விருதானது" வழங்கப்பட உள்ளது.
- திலக் ஸ்மாரக் மந்திர் அறக்கட்டளையின் மூத்த மற்றும் தற்போதைய நிர்வாக தலைவர் தீபக் திலக், இந்த விருதினை பிரதமருக்கு வழங்கி கௌரவிக்கிறார். இந்த விருதானது ஒவ்வொரு ஆண்டும் மதிப்புமிக்க தலைவரான லோகமான்ய திலகரின் நினைவு தினமான ஆகஸ்ட் 1 அன்று, தேசத்தின் வளர்ச்சிக்காக குறிப்பிடத்தக்க பங்களிப்பை மேற்கொண்ட நபர்களை மதிப்பளிக்கும் வகையில் வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## தென்னாப்பிரிக்க நாட்டின் உயரிய தேசிய விருதானது இந்திய வம்சாவளியை சேர்ந்த நபருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- தென்னாப்பிரிக்காவில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரேசா மியா தலைமையிலான பெகாசஸ் யுனிவர்சல் ஏரோஸ்பேஸ் குழுவிற்கு, புதுமை மற்றும் ஆராய்ச்சிக்கான பிரிவில் பெரும் மதிப்புமிக்க தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப(NSTF) விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்திற்கு மேலாக செங்குத்து மேலேற்றம் மற்றும் தரையிறங்கும் வகையிலான விமான திட்டத்தை உருவாக்கியதற்காக இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது. தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மன்றமானது இந்த உயரிய விருதை வழங்கி கௌரவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 2023 ஆம் ஆண்டிற்கான 'தகைசால் தமிழர்' விருதானது கி.வீரமணி அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

- 2023-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் உயரிய விருதுகளில் ஒன்றான 'தகைசால் தமிழர்' விருதானது திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களுக்கு வழங்க உள்ளதாக சமீபத்திய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்த விருதானது 2023 ஆம் ஆண்டின் சுதந்திர தின விழாவில் முதல்வர் ஸ்டாலின் அவர்களால் கி.வீரமணி அவர்களுக்கு வழங்கப்படும் எனவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- 1962-இல் "விடுதலை" நாளிதழின் ஆசிரியராக பொறுப்பேற்று, தொடர்ந்து 60 ஆண்டுகளையும் கடந்து தனது மிகச் சிறப்பாக பணி செய்து வருபவரும், The Modern Rationalist — (ஆங்கிலம்), உண்மை, பெரியார் பிஞ்சு இதழ்களுக்கு ஆசிரியருமான இவர் தனது சிறப்பான பணிகளின் மூலம் தமிழ் வளர்ச்சிக்கு பங்காற்றுவதற்காக இந்த விருதிற்கு இவர் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2023 ஆம் ஆண்டிற்கான தேசிய கோபால் ரத்னா விருதானது நாட்டின் தேசிய பால் தினத்தில் வழங்க திட்டம்.

- பால்வளத்துறை மற்றும் கால்நடை பராமரிப்பு அமைச்சகமானது, 2023 ஆம் ஆண்டிற்கான தேசிய கோபால் ரத்னா விருதுகளை நாட்டின் தேசிய பால் தினத்தில் வழங்க திட்டமிட்டுள்ளதாக தனது ஆகஸ்ட் மாத அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.
- இந்த விருதுகளானது RGM திட்டத்தின் கீழ் பால் கூட்டுறவு சங்கங்கள், பால் உற்பத்தி செய்யும் விவசாயிகள் மற்றும் செயற்கை கருவூட்டல் தொழில்நுட்ப வல்லுநர்கள்(AITs) ஆகியோர்களை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. உள்நாட்டு மாடு இனங்களை பாதுகாக்கும் நோக்கத்துடன் ராஷ்ட்ரிய கோகுல் மிஷன் (RGM), இந்தியாவில் 2014 டிசம்பர் மாதம் கொண்டு வரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

- அலிகார் பல்கலைக்கழக பேராசிரியருக்கு "ராஷ்ட்ரிய கௌரவ் விருதானது" வழங்கப்பட்டுள்ளது.
- புது தில்லியில் "தேசிய ஒருமைப்பாடு மற்றும் பொருளாதார வளர்ச்சி" என்ற தலைப்பில் நடைபெற்ற மாநாட்டில், அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறை பேராசிரியரான டாக்டர் பல்லவ் விஷ்ணுவுக்கு மதிப்புமிக்க 2023 ஆம் ஆண்டிற்கான 'ராஷ்ட்ரிய கௌரவ் விருது' ஆனது வழங்கப்பட்டுள்ளது.
- இந்தியா இன்டர்நேஷனல் ஃப்ரெண்ட்ஷிப் சொசைட்டி(IIFS) என்ற தன்னார்வ தொண்டு அமைப்பால் வழங்கப்பட்ட இந்த மதிப்புமிக்க விருதை இவருக்கு ஸ்ரீமதி. மீரா குமார்(மக்களவை முன்னாள் சபாநாயகர்) இவரின் சிறந்த செயல்திறன் மற்றும் சிறந்த சேவைக்காக வழங்கி கௌரவித்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## மதிப்புமிக்க தேசிய புவி அறிவியல் விருதானது டாக்டர் வலியுர் ரஹ்மான் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- சமீபத்திய விருது வழங்கும் நிகழ்ச்சியில் இந்திய குடியரசுத் தலைவர் முர்மு அவர்கள், அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையின் முன்னாள் மாணவரான டாக்டர் வலியுர் ரஹ்மான் அவர்களுக்கு இந்த மதிப்புமிக்க தேசிய புவி அறிவியல் விருதை வழங்கியுள்ளார்.
- இவர் தற்போது இந்திய அரசாங்கத்தின் புவி அறிவியல் அமைச்சகத்தின் கடல் மற்றும் துருவத்திற்கான ஆராய்ச்சிக்கான தேசிய மையத்தில் விஞ்ஞானி ஆக பணிபுரிகிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## SJVN நிறுவனத்திற்கு 'NTPC ராஜ்பாஷா ஷீல்டு 2023' விருது வழங்கப்பட்டுள்ளது.

- 2023 ஆம் ஆண்டிற்கான NTPC ராஜ்பாஷா கேடய அமைப்பின் விருதை மத்திய அரசின் மின் பொதுத்துறை நிறுவனமான SJVN ஆனது வென்றுள்ளது.
- தேசிய தலைநகரமான புதுதில்லியில் நடைபெற்ற மின்துறை அமைச்சகத்தின் இந்தி ஆலோசனைக் குழுவின் மாநாட்டில் இந்த விருதுகளானது வழங்கப்பட்டுள்ளது. அலுவல் மொழிக் கொள்கையைப் பரப்புவதற்கும் பெருநிறுவனங்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்காக இந்திய அரசின் மின்சக்தி அமைச்சகத்தால் ஆண்டுதோறும்

## கிரீஸ் நாட்டின் உயரிய கிராண்ட் கிராஸ் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் ஹானர் என்ற விருதானது பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.

- கிரீஸ் நாட்டின் உயரிய கிராண்ட் கிராஸ் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் ஹானர் விருதை இந்திய நாட்டின் பிரதமர் மோடிக்கு அந்நாட்டின் அதிபர் கேடரினா என். சகெல்லரோபௌலோ வழங்கி கௌரவித்தார்.
- இந்த விருதானது அந்நாட்டின் தலைநகரான ஏதென்ஸில் உள்ள நாடாளுமன்ற வளாகத்தில் வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதானது பிரதமர் மோடி உலகின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஆற்றிய சிறப்பான பங்களிப்பை காட்டுகிறது என்றும் இந்தியா மீது கிரீஸ் நாடு வைத்திருக்கும் மரியாதையை காட்டுகிறது என்றும் அந்நாட்டு அதிபர் தெரிவித்துள்ளார்.



## 2023 ஆம் ஆண்டிற்கான 69வது தேசிய திரைப்பட விருதுகள் பட்டியல் வெளியீடு:

- 2023 ஆம் ஆண்டிற்கான 69ஆவது தேசிய திரைப்பட விருதுகளின் வெற்றியாளர்கள் பட்டியலானது தேசிய தலைநகரமான புது தில்லியில் உள்ள "தேசிய ஊடக மையத்தில்" அறிவிக்கப்பட்டுள்ளது.
- மேலும் இந்த பட்டியலின் வெற்றியாளர்கள் குடியரசுத் தலைவரால் எதிர்கால தேதியில் நடைபெறும் விழாவில் கௌரவிக்கப்படுவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வகைப்பாடு | வெற்றியாளர் |
|---|---|
| சிறந்த திரைப்படம் | ராக்கெட்ரி |
| சிறந்த இயக்குனர் | நிகில் மகாஜன் (கோதாவரி) |
| சிறந்த நடிகர் | அல்லு அர்ஜுன்(புஷ்பா) |
| சிறந்த தமிழ் திரைப்படம் | கடைசி விவசாயி |

## இந்திய ஸ்மார்ட் சிட்டி விருதுகள் போட்டி 2022 – வெற்றியாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளன.

- 2022 ஆம் ஆண்டிற்கான "இந்தியா ஸ்மார்ட் சிட்டிஸ் விருதுகள்" போட்டியின் (ISAC) வெற்றியாளர்களின் பட்டியலானது மத்திய அரசு வெளியிட்டுள்ளது.
- இதில் கிட்டத்தட்ட 35 திட்ட விருதும், 6 கண்டுபிடிப்பு விருதும், 13 தேசிய/மண்டல நகர விருதும், 5 மாநில/யூடி விருதும் மற்றும் 7 பார்ட்னர் விருதும் இந்த பட்டியலில் அடங்கும்.
- இதற்கான விருதுகளானது ஜனாதிபதி முர்மு செப்டம்பர் 27 ஆம் தேதி மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் நடைபெறும் நிகழ்ச்சியில் வழங்கப்படும் என மத்திய அரசு சமீபத்தில் அறிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- அவற்றுள் சில பின்வருமாறு:
- சூழலுக்கான விருது - கோயம்புத்தூர்
- கலாச்சாரத்திற்கான விருது - அகமதாபாத்
- பொருளாதாரத்திற்கான விருது- இந்தூர்




## தேசிய அளவில் சிறந்த ஆசிரியர் விருதுக்கு விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த ஆசிரியர் தேர்வு.

- விசாகப்பட்டினத்தில் சிவாஜிபாலத்தில் உள்ள GVMC பள்ளியில் இரண்டாம் வகுப்பு ஆசிரியராக பணியாற்றி வரும்(SGT) எம். உமா காந்தி அவர்கள், மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் (MHRD) ‘சிறந்த ஆசிரியருக்கான விருதுக்கு" தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- செப்டம்பர் 5 ஆம் தேதி தேசிய தலைநகரமான புதுதில்லியில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களிடமிருந்து இந்த மதிப்புமிக்க விருதை பெறுவார் என மத்திய அரசின் ஆகஸ்ட் 2023 அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நிஷா பிஸ்வால்




- செய்தி- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கொள்கை நிபுணர் நிஷா பிஸ்வால் துணை தலைமை செயல் அதிகாரியாக அமெரிக்க நிதி நிறுவனத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பொருளாதாரக் கொள்கை நிபுணரான நிஷா பிஸ்வால், அமெரிக்க நிதி நிறுவனத்தின் துணை தலைமை நிர்வாக அதிகாரியாக (DYCEO) நியமிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க செனட் சபையானது அறிவித்துள்ளது.
- அமெரிக்க வெள்ளை மாளிகை மற்றும் வெளியுறவுக் கொள்கையின் சர்வதேச மேம்பாட்டுத் திட்டங்களில் கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள இவர் அமெரிக்காவின் சர்வதேச வளர்ச்சி நிதியக நிறுவனத்தின் துணை தலைமை நிர்வாக அதிகாரியாக தனது சிறப்பான பணியை மேற்கொள்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய தேர்தல் ஆணையத்தின் தேசிய வாக்காளர் விழிப்புணர்வு தூதராக சச்சின் டெண்டுல்கர் நியமிக்கபட்டுள்ளார்.

- இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் மற்றும் மதிப்பிற்குரிய பாரத ரத்னா வென்ற சச்சின் டெண்டுல்கர், தேர்தல்-வாக்காளர் விழிப்புணர்வு மற்றும் அதன் கல்விக்கான இந்திய தேர்தல் ஆணையத்தின் தேசிய தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்த நியமனத்தில் மூன்று ஆண்டுகளுக்கு பதவி வகிப்பதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்போவதாக இந்திய தேர்தல் ஆணையம் தனது சமீபத்திய அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது. 2024 பொதுத் தேர்தலில் வாக்காளர்களின் பங்கேற்பை அதிகரிப்பதை நோக்கமாக கொண்டு இந்த நியமமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## பாகிஸ்தானில் இந்திய தூதரகத்திற்கு தலைமை தாங்கும் முதல் பெண் என்ற அந்தஸ்தை கீதிகா பெறுகிறார்.

- 2005 பிரிவு இந்திய வெளியுறவு சேவை (IFS) அதிகாரியான கீதிகா ஸ்ரீவஸ்தவா, பாகிஸ்தானின் தலைநகரமான இஸ்லாமாபாத்தில் புதிய விவகார பொறுப்பு அதிகாரியாக(CDA) நியமிக்கப்பட்டுள்ளதாக MEAஇன் சமீபத்திய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இவர் தற்போதைய டாக்டர் எம் சுரேஷ் குமாருக்கு அடுத்தப்படியாக இந்த பதவி வகிப்பார் மேலும் சுதந்திரத்திற்குப் பிறகு முதல்முறையாக பாகிஸ்தானில் உள்ள இந்திய தூதரகத்தின் தலைவராக பெண் ஒருவர் பொறுப்பேற்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



# முக்கிய தினங்கள்

## உலகளாவிய வலை தினம் 2023




- WWW இணையத்தை உருவாக்கிய டிம் பெர்னர்ஸ்-லீயின் நினைவாகவும், இணையதளத்தை பயன்படுத்தி உலக மக்கள் சுதந்திரமாக தகவல்களை தேடுவதற்கான திறனை மதித்தல் மற்றும் கௌரவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 1 ஆம் நாளானது உலகளாவிய வலை தினமாக கொண்டாடப்படுகிறது.
- இந்த தினத்திற்கென்று எந்த ஒரு கருப்பொருளும் இல்லை. மேலும் உலகில் உள்ள மக்கள் இணையத்தளத்தை நன்முறையில் மற்றும் பாதுகாப்பான முறையில் பயன்படுத்துவதை பொது நோக்கமாக கொண்டு கொண்டாடப்படுகிறது.

## உலக தாய்ப்பால் வாரம் 2023




- குழந்தைகளின் ஆரோக்கியம், சுகாதாரம் மற்றும் நலன், நல்ல ஊட்டச்சத்து, தாய்வழி ஆரோக்கியத்தின் நன்மைகள் மற்றும் அதன் மேம்பாடு ஆகியவற்றை உலக தாய்மார்களிடையே முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதத்தின் முதல் வாரமானது(ஆகஸ்ட் 01 – 07 வரை) உலக தாய்ப்பால் வாரமாக கடைப்பிடிக்கப்படுகிறது.
- இது 1990 இன்னோசென்டி அமைப்பின் பிரகடனத்தின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது. மேலும் உலக தாய்ப்பால் வாரமானது(WBW) 1992 இல் தொடங்கப்பட்டதாகும். "தாய்ப்பால் மற்றும் வேலை" என்பது இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும்

## தேசிய காகித தினம் 2023

- இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு, இந்தியாவில் கையால் நெய்யப்பட்ட காகிதத் தயாரிப்பின் வளமான பாரம்பரியத்தை மதிப்பளிக்கவும், அதனை புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்தலுக்காக, ஆகஸ்ட் 1, 1940 அன்று மகாராஷ்டிராவின் புனேவில் கையால் நெய்யப்படும் காகித நிறுவனத்தைத் தொடங்கி வைத்ததை நினைவு கூறும் விதமாக இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 01 ஆம் நாளானது தேசிய காகித தினமாக கொண்டாடப்படுகிறது.
- மேலும் இந்திய அரசியலமைப்பின் முதல் பிரதிகளானது இங்கு அச்சிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த தினத்திற்கென்று எந்த ஒரு கருப்பொருளும் இல்லாமல் காகிதத்தைப் பற்றிய விழிப்புணர்வைப் பொது மக்களுக்கு பரப்புதவத்தை நோக்கமாக கொண்டு இந்த தினமானது கொண்டாடப்படுகிறது.

## ஹிரோஷிமா தினம் 2023

- 1945 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஜப்பான் நாட்டில் உள்ள முக்கிய தொழில் நகரமான ஹிரோஷிமாவில் அணுகுண்டு வீசப்பட்டதை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 6 ஆம் நாளானது ஹிரோஷிமா தினமாக பல்வேறு நாடுகளிலும் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த குண்டுவெடிப்பில் கிட்டத்தட்ட 2,00,000 க்கும் மேற்பட்ட பொது மக்கள் சில நொடிகளில் கொல்லப்பட்டனர் மற்றும் சில ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். இந்த வீரியமிக்க அணுகுண்டின் பெயர் "லிட்டில் பாய்" என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## தேசிய கைத்தறி தினம் 2023

- கைத்தறி துறையை ஊக்குவிப்பதும், அத்தொழில் ஈடுபட்டுள்ள நெசவாளர் சமூகத்தின் முன்முயற்சிகள் மற்றும் அவர்களின் திறன்களை உலகரங்கில் அங்கீகரிப்பதும், இச்சமூகத்தின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை பாதுகாப்பதையும் நோக்கமாக கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 07 ஆம் நாளானது தேசிய கைத்தறி தினமாக கடைபிடிக்கப்படுகிறது.
- "நிலையான நாகரீகத்திற்கான கைத்தறி" ("Handlooms for Sustainable Fashion") என்பது இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும்.

## வெள்ளையனே வெளியேறு இயக்கம் நாள்



- இந்தியாவில் ஆங்கிலேயர் காலனித்துவ ஆட்சியை உடனடியாக முடிவுக்கு கொண்டு வரவும், ஆங்கிலேயர்கள் "இந்திய நாட்டை விட்டு வெளியேறவும்" இந்தியாவின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டின் பிரகடனமாக இருந்த வெள்ளையனே வெளியேறு இயக்க தீர்மானத்தை நிறைவேற்றியதை நினைவு கூறும் வகையில் இந்த தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 08 ஆம் நாளில் கடைப்பிடிக்கப்படுகிறது.
- இந்த நாளானது ஆகஸ்ட் கிராந்தி திவாஸ்/தினம் என்றும் நாடு முழுவதும் அழைக்கப்படுகிறது. மேலும் தேசிய ஒருங்கிணைப்புக்கான தேசிய அளவிலான உரையாடல்கள் மற்றும் பிற நிகழ்வுகளுடன் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவத்தை நோக்கமாக கொண்டு இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.

## நாகசாகி தினம்

- இரண்டாம் உலகப்போரின் கடைசி காலங்களில் ஆகஸ்ட் 9, 1945 அன்று ஜப்பான் நாட்டின் தொழில்நகரமான நாகசாகி மீது அமெரிக்காவால் வீசப்பட்ட அணுகுண்டினால் 74,000 – 80,000 நபர்கள் கொல்லப்பட்டனர். இந்த துயர சம்பவத்தால் கொல்லப்பட்ட நபர்களின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 09 ஆம் நாளானது நாகசாகி தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- நாகசாகியில் வீசப்பட்ட இந்த அணுகுண்டுக்கு 'ஃபேட் மேன்' என்ற குறியீட்டுப் பெயர் வைக்கப்பட்டுள்ளது மற்றும் இதற்கு முன்பாக ஆகஸ்ட் 06 ஆம் நாளானது ஹிரோஷிமா மீது இதே போன்ற துயர சம்பவம் நிகழ்த்தப்பட்டு வரலாற்றின் மறையா பக்கங்களை அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## உலகப் பழங்குடியின மக்களின் சர்வதேச தினம் 2023

- உலகில் உள்ள அனைத்து பழங்குடியின மக்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்கும், அவற்றை பாதுகாப்பதற்காகவும் ஆர்க்டிக் பிராந்தியத்தில் உள்ள இன்யூட் முதல் வட ஆப்பிரிக்க பிராந்தியத்தில் உள்ள டுவாரெக் வரையிலான பழங்குடி இனங்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 9 ஆம் நாளானது உலகப் பழங்குடியின மக்களின் சர்வதேச தினமாக கொண்டாடப்படுகிறது.
- மேலும் டிசம்பர் 23, 1994 அன்று, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது அதன் தீர்மானம் 49/214 யின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 9 ஆம் நாளானது உலகப் பழங்குடியின மக்களின் சர்வதேச தினமாக அனுசரிக்கப்படும் என்று அங்கீகரித்துள்ளது.




## உலக உயிரி எரிபொருள் தினம் 2023

- ஆகஸ்ட் 9, 1893 இல், சர் ருடால்ஃப் டீசல் முதல் முறையாக கடலை எண்ணெய் கலவையுடன் கூடிய இயந்திர எஞ்சினை இயக்கினார். பின்பு அதிலிருந்து டீசல் இயந்திர எஞ்சினாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த டீசல் இயந்திர எஞ்சினைக் கண்டுபிடித்த சர் ருடால்ஃப் டீசலின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 10ஆம் நாளானது "உலக உயிரி எரிபொருள் தினமாக" கொண்டாடப்படுகிறது.
- மரபுசார் எரிசக்தி வளங்களை விட உயிரி எரிபொருள்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களை பயன்பாட்டை ஊக்குவிப்பதை நோக்கமாக கொண்டு இந்த தினமானது கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த தினத்திற்கென்று எந்த ஒரு கருப்பொருளும் குறிப்பிடவில்லை.



## சர்வதேச இளைஞர் தினம் 2023

- இளைஞர்களின் குணங்கள் மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் அவர்களின் திறனை மதிக்கும் ஒரு தளத்தை வழங்குவதற்காகவும் இளைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் சிக்கல்களையும் அகற்றுவதற்கான முயற்சிகளை கவனம் செலுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 12 ஆம் நாளானது சர்வதேச இளைஞர் தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.
- "Green Skills for Youth: Towards a Sustainable World" என்பது 2023 ஆம் ஆண்டிற்கான கருப்பொருளாகும். மேலும் இளைஞர்களின் வாழ்க்கைக்கு

தேவையான திறன்களை மேம்படுத்துவதை முதன்மையான நோக்கமாக கொண்டு இந்த தினமானது கடைப்பிடிக்கப்படுகிறது.

## உலக யானைகள் தினம் 2023

- உலகெங்கிலும் உள்ள யானைகள் சந்திக்கும் சவால்கள் மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள உலகளவில் தனிநபர் மற்றும் பல்வேறு குழுக்களை ஒன்றிணைப்பதை நோக்கமாக கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 12 ஆம் நாளானது உலக யானைகள் தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.
- இந்தியாவின் தேசிய பாரம்பரிய விலங்காக யானை 2010 இல் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆசியாவிலேயே சுற்றுலாவுக்குப் பயன்படுத்தப்படும் யானைகளின் எண்ணிக்கையில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.




## உலக உறுப்பு தான தினம் 2023

- மனித உடல் உறுப்பு தானத்தின் முக்கியத்துவத்தைப்பற்றிய விழிப்புணர்வை உலக பொது மக்களுக்கு ஏற்படுத்தவும், உடல் உறுப்பு தானம் குறித்த தவறான புரிதல் கருத்துக்களை மக்களுக்கு உணர்த்தவும் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 13ஆம் நாளானது உலக உறுப்பு தான தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.
- Step up to volunteer; need more organ donors to fill the lacunae என்பது இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும். மேலும் இது உடலுறுப்பு தானத்திற்கான முக்கியத்துவத்தை வலியுறுத்த உலக மற்றும் உள்ளூர் பொதுமக்களுக்கான உலகளாவிய அழைப்பை மையமாகக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## விபஜன் விபிஷிகா ஸ்மிருதி திவாஸ்

- 1947ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிவினையின் போது ஏற்பட்ட கடும் போராட்டங்கள் மற்றும் உயிர் தியாகங்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் இந்தியாவில் ஆகஸ்ட் 14 2023 ஐ பிரிவினை பயங்கர நினைவு தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- இந்திய பிரதமர் மோடி ஆகஸ்ட் 14 ஆம் தேதியை பிரிவினையின் கொடூர நினைவு தினம் அல்லது "விபஜன் விபிஷிகா ஸ்மிருதி திவாஸ்" ஆக அறிவித்துள்ளார். சமூகப் பிளவுகள், நல்லிணக்கமின்மை ஆகிய கொடிய விஷத்தை அகற்றி, சமூக நல்லிணக்கம், ஒற்றுமை மற்றும் மனித அதிகாரம் ஆகியவற்றின் உணர்வை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இந்த நாள் நமக்கு நினைவூட்டுவதாக நமது பிரதமர் கூறியுள்ளார்.




## இந்திய சுதந்திர தினம் 2023




- கிட்டத்தட்ட 300 ஆண்டுகளாக ஆங்கிலேய ஆட்சியில் சிக்கி தவிக்கும் இந்திய நாட்டை அப்பிடியிலிருந்து விலகி சுதந்திர காற்றை சுவாசிக்கும் முதல் நாளான ஆகஸ்ட் 15 ஆம் நாளானது முக முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.
- தனது சுதந்திரப் பயணத்தைத் தொடங்கி ஜனநாயக, குடியரசு மற்றும் இறையாண்மை கொண்ட நாடாக மாறிய இந்த நாளை போற்றுவதையும் இந்த நாளை பெறுவதற்கு சிந்திய பல்வேறு தியாகங்களுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் இந்த தினமானது கொண்டாடப்படுகிறது.

## பார்சிக்களின் புத்தாண்டான "நவ்ரோஸ்" கொண்டாடப்படுகிறது.

- இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளில் பரவியுள்ள முக்கிய இனமான "பார்சி சமூகத்தினர்" ஆகஸ்ட் 16 ஆம் நாளை பார்சி புத்தாண்டு அதாவது "பட்டேட்டியை" கொண்டாடுகின்றனர்.
- பார்சிகள் என்பவர்கள் ஜொராஸ்ட்ரிய மதத்தை பின்பற்றும் இந்திய துணைக்கண்டத்தின் ஒரு இனமதக் குழுவாகும். அவர்கள் பாரசீக பிராந்திய சாம்ராஜ்யத்தில் இடைக்கால

இந்தியாவிற்கு குடிபெயர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## உலக மனிதாபிமான தினம் 2023

- ஈராக் நாட்டில் உள்ள ஐக்கிய நாடுகள் பொது சபையின் கிளை-தலைமையகம் மீது தீவிரவாத அமைப்புகள் மூலம் குண்டுவீசித் தாக்கப்பட்டதன் ஆண்டு நிறைவைக் குறிப்பிடும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 19 ஆம் நாளானது உலக மனிதாபிமான தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.
- இந்த தினமானது ஐநாவால் 2009 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதாகும். மேலும் இந்த தினமானது உலகம் முழுவதும் உள்ள மனிதாபிமான உதவிப் பணியாளர்களை(Social Workers) கௌரவிப்பதை நோக்கமாக கொண்டுள்ளது. "It takes a village" என்பது இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும்.




## உலகப் புகைப்பட தினம் 2023



- லென்ஸ் மூலம் தங்களின் உணர்வு உலகத்தைப் பகிர்ந்து கொள்ள மக்களை ஊக்குவிப்பதும் சமூக மற்றும் சமுதாயத்தில் புகைப்படத்தின் தாக்கத்திற்கு மதிப்பளித்தல் மற்றும் பாராட்டுவதற்காகவும் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 19 ஆம் நாளானது உலக புகைப்பட தினமாக கடைபிடிக்கப்படுகிறது.
- "LANDSCAPES" என்பது இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும். மேலும் இந்த தினமானது ஆகஸ்ட் 19, 1839 அன்று பிரெஞ்சு அறிவியல் நிறுவனத்தால் பொதுமக்களுக்கு டாகுரோடைப் செயல்முறையை அறிவித்ததை நினைவு கூறுவதை நோக்கமாக கொண்டு இந்த தினமானது மேற்கொள்ளப்படுகிறது.

## உலக கொசு தினம் 2023

- "பெண் கொசுக்கள் மனிதர்களிடையே மலேரியாவை பரப்புகின்றன" என்று பிரிட்டிஷ் மருத்துவர் சர் ரொனால்ட் ராஸ் 1897 ஆம் ஆண்டு கண்டுபிடித்ததை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 20 ஆம் நாளானது "உலக கொசு நாள்" என்ற பெயரில் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான எந்த ஒரு கருப்பொருளும் இல்லை. மேலும் இது மலேரியா போன்ற கடும் ஆபத்து விளைவிக்கக்கூடிய இந்த நோய்களில் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வழிமுறைகள் மற்றும் அதை பற்றிய விழிப்புணர்வை உலக பொது மக்களுக்கு ஏற்படுத்தும் நோக்கத்திற்காக இந்த தினமானது கடைபிடிக்கப்படுகிறது.

## அக்ஷய் உர்ஜா திவாஸ் 2023

- இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் வளர்ச்சிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் அதன் முக்கிய மேம்பாடு திட்டங்களை பொது மக்களிடையே உறுதிப்படுத்துவதையும் நோக்கமாக கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 20 ஆம் நாளானது அக்ஷய் உர்ஜா திவாஸ் ஆக கடைப்பிடிக்கப்படுகிறது.
- இந்த தினமானது புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தால் 2004 ஆம் ஆண்டிலிருந்து கடைப்பிடிக்கப்படுகிறது மேலும் இந்த நாளானது இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்த நாளை நினைவு கூறுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## மெட்ராஸ் தினம்

- 1639 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மெட்ராஸ் என்ற மாநகராமனது நிறுவப்பட்டதைக் கொண்டாடுவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 22 ஆம் நாளானது "மெட்ராஸ் தினமாக" அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டானது இந்நகரம் நிறுவப்பட்ட 384 வது ஆண்டு நிறைவைக் குறிப்பதாக அமைகிறது. மேலும் 2004 ஆம் ஆண்டு அப்பிராந்தியத்
- தை சேர்ந்த ஒரு சிறிய குழுவினரின் முயற்சியால் மெட்ராஸ் தினம் கொண்டாடத் தொடங்கியது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.





## அடிமை வர்த்தகம் மற்றும் அதை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் 2023

- அடிமை வர்த்தகத்திற்கு எதிராக ஆகஸ்ட் 23, 1791 அன்று இப்போது ஹைட்டி என்று அழைக்கப்படும் செயின்ட் டொமிங் பகுதியில் ஒரு எழுச்சிமிக்க மாநாடானது நடைபெற்றுள்ளது. இந்த மாநாட்டில் சில முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டதை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 23 ஆம் நாளானது அடிமை வர்த்தகம் மற்றும் அதை ஒழிப்பதற்கான சர்வதேச தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.
- Fighting slavery's legacy of racism through transformative education என்பது இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும்.




## உலகப் பெண்கள் சமத்துவ தினம் 2023

- அமெரிக்க அரசியலமைப்பில் 1920 ஆம் ஆண்டு பத்தொன்பதாம் திருத்தம்(பெண்களின் வாக்குரிமை) மேற்கொள்ளப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதன் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 26 ஆம் நாளானது உலக பெண்கள் சமத்துவ தினமாக கொண்டாடப்படுகிறது.
- இந்த தினமானது 1971 ஆம் ஆண்டில், அமெரிக்க காங்கிரஸ் செனட் சபையானது ஆகஸ்ட் 26 ஐ உலக பெண்கள் சமத்துவ தினமாக அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். Embrace Equity என்பது இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும்.




## தேசிய விண்வெளி தினம்

- சமீபத்தில் நடைபெற்ற வரலாற்றின் சிறப்புமிக்க நிகழ்வான சந்திரயான்-3 இன் வெற்றியைக் குறிக்கும் வகையில், ஆகஸ்ட் 23ஆம் தேதியை "தேசிய விண்வெளி தினமாக" இந்தியாவானது ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடும் என பிரதமர் மோடி ஆகஸ்ட் 26 அன்று அறிவிவித்துள்ளார்.
- பிரிக்ஸ் மாநாடு முடித்த பின்பு ஆகஸ்ட் 26 அன்று பெங்களூருவில் இஸ்ரோ விஞ்ஞானிகள் குழுவில் உரையாற்றிய பிரதமர் மோடி, விஞ்ஞானிகளுக்கு வாழ்த்து தெரிவித்த பின்பு இந்த முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.




## தேசிய விளையாட்டு தினம் 2023


- இந்தியாவின் புகழ்பெற்ற மற்றும் தலைசிறந்த ஹாக்கி வீரரான மேஜர் தியான் சந்தின் வாழ்க்கை வரலாற்றை மதிப்பளிக்கும் வகையில் அவரின் பிறந்த நாளான ஆகஸ்ட் 29 ஆம் நாள் ஒவ்வொரு ஆண்டும் தேசிய விளையாட்டு தினமாக கொண்டாடப்படுகிறது.
- இவர் 1926 முதல் 1948 வரையிலான அவரது முழு வாழ்க்கையிலும் கிட்டத்தட்ட 185 போட்டிகளில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். "விளையாட்டு வீரர்களை கௌரவித்தல்" என்பதை மையப்பொருளாக கொண்டு இந்த தினமானது கொண்டாடப்படுகிறது. ராஷ்ட்ரிய கேல் திவாஸ் என்றும் இந்த தினம் அழைக்கப்படுகிறது.





## தேசிய சிறு தொழில் தினம் 2023

- நாட்டில் உள்ள குறு மற்றும் சிறு தொழில்களின் சாதனைகளைக் குறிப்பிட்டு பாராட்டுவதற்கும் அவர்களின் வளர்ச்சி மற்றும் உறுதி மேம்பாட்டிற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை தொழில்முனைவோருக்கு கொண்டு செல்வதையும் நோக்கமாக கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 30 அன்று தேசிய சிறுதொழில் தினமானது கொண்டாடப்படுகிறது.
- சிறு, குறு தொழில்முனைவோர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் அதை

நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளை மேம்படுத்துவதையும் பொது கருத்தாக கொண்டு இந்த தினமானது கொண்டாடப்படுகிறது.




## உலக சமஸ்கிருத தினம் 2023




- பண்டைய இந்திய மொழிகளுள் ஒன்றான சமஸ்கிருதத்தை போற்றி மதிப்பளிக்கும் வகையிலும் அதன் பன்முகத்தன்மையை உலகறிய செய்வதையும் நோக்கமாக கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 31 ஆம் நாளானது உலக சமஸ்கிருத தினமாக கொண்டாடப்படுகிறது.
- பல தற்போதைய இந்திய மொழிகள் சமஸ்கிருதத்திலிருந்து உருவாகியுள்ளன என்பதும் வட மற்றும் மத்திய இந்தியாவில் உள்ள பல புராணங்கள் மற்றும் நூல்களும் இம்மொழியில் எழுதப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் 2015 ஆம் ஆண்டு சம்ஸ்கிருத மொழிக்கு செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது என்பது வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாக பார்க்கப்படுகிறது.

## தாகூரின் 82வது நினைவு தினம் வங்கதேசத்தில் அனுசரிக்கப்படுகிறது.

- இந்தியாவின் முதல் நோபல் பரிசு பெற்ற ரவீந்திரநாத் தாகூரின் 82ஆவது நினைவு தினமானது ஆகஸ்ட் 06 அன்று வங்கதேசத்தில் அனுசரிக்கப்படுகிறது. கிரிகோரியன் நாட்காட்டியின்படி, தாகூர் தனது 80வது வயதில் ஆகஸ்ட் 07 ஆம் தேதி 1941ஆம் ஆண்டு இறந்தாலும் வங்கதேசத்தில், வங்காள நாட்காட்டியின் படி ஸ்ரபன் 22ஆம் தேதி அவரது நினைவு நாளாக அனுசரிக்கப்படுகிறது. (அதாவது ஆகஸ்ட் 06)
- குருதேவ் என்று அழைக்கப்பட்ட இவர் தனது இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் மூலம் இந்திய துணைக் கண்டத்தின்(விடுதலைக்கு முன்னிருந்த இந்தியா) கலாச்சாரத்தில், குறிப்பாக வங்காளத்தின் கலாச்சாரத்தில் மிக ஆழமான முத்திரையை பதித்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



## புத்தகங்கள்

### செயற்கை நுண்ணறிவு நிபுணர் டா சச்சின் ஷர்மா, AI சம்பந்தப்பட்ட தனது புதிய புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.

- செயற்கை நுண்ணறிவு ஆர்வலர் மற்றும் எழுத்தாளரான டா சச்சின் ஷர்மா தனது AI சம்பத்தப்பட்ட "Prompt DOT AI: Mastering the Art of Creativity in the age of AI" என்று தலைப்பிடப்பட்ட புதிய புத்தகத்தை ஆகஸ்ட் 10 2023 அன்று வெளியிட்டுள்ளார்.
- மனிதப் படைப்பாற்றல் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றின் அற்புதமான தகவல்கள் மற்றும் அதில் உள்ள சிக்கல்கள் குறித்து இந்த புத்தகமானது ஆராய்கிறது. மேலும் புதுமையான தொழில்நுட்பம் மூலம் எவ்வாறு தனிநபர்கள் மற்றும் ஸ்டார்ட்அப் நிறுவனங்களை ஆக்கப்பூர்வ வெளியீடுகளை செழுமைப்படுத்த AI தூண்டுதல்களுக்கான வழிமுறைகளை வழங்குவதை நோக்கமாக கொண்டு இந்தப் புத்தகமானது வடிவமைக்கப்பட்டுள்ளதாகும்.

### "குவி மற்றும் தேசியா" புத்தகங்களை மத்திய அமைச்சர் புவனேஸ்வரில் வெளியிட்டுள்ளார்.

- மத்திய திறன் மேம்பாடு மற்றும் கல்வித்துறை அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் மற்றும் மத்திய நிதி அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் ஆகியோர் "குவி மற்றும் தேசியா" புத்தகங்களை ஒடிஷாவின் தலைநகரமான புவனேஸ்வரில் வெளியிட்டுள்ளனர்.
- தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி அமைப்பானது(NCERT), முதல் முறையாக, ஒடிசா மத்திய பல்கலைக்கழக நிறுவனத்துடன் இணைந்து, "குவி ப்ரைமர்" மற்றும் "தேசியா ப்ரைமர்" ஆகிய இரண்டு இந்த விலைமதிப்பற்ற புத்தகங்களை தயாரித்துள்ளது என்று மத்திய அமைச்சர் பிரதான் குறிப்பிட்டுள்ளார்.
- இந்த இரண்டு புத்தகங்களும் மாநிலத்தின் பழங்குடியின குழந்தைகளின் வலுவானக் கல்வி, கலாச்சாரத்தின் அடித்தளத்தை வடிவமைப்பதோடு, சமூகத்தின் மொழியியல் பாரம்பரியம் மற்றும் அவற்றின் அடையாளத்தைப் பாதுகாத்து வளர்ப்பதை நோக்கமாக கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


### "முன்னோக்கி நகர்வோம்" என்ற தலைப்பில் உருவாக்கப்பட்ட புத்தகத்தை மத்திய அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

- மத்திய கல்வி மற்றும் திறன் மேம்பாடு அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் அவர்களால், "முன்னோக்கி செல்வோம்" என்ற தலைப்பில் ஒரு நாவல் புத்தகத்தை புது தில்லியில் உள்ள கௌஷல் பவனில் வெளியிட்டுள்ளார்.
- இந்த புத்தகமானது NCERT மற்றும் UNESCO ஆகிய அமைப்புகளால் இணைந்து வடிவமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். கதைசொல்லல் மூலம் மாணவர்களை மகிழ்விக்கும் அதே வேளையில் முழுமையான 100% நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளிக்க மாணவர்களை ஊக்குவிப்பதை நோக்கமாக கொண்டு இந்த புத்தகமானது வடிவமைக்கப்பட்டுள்ளது என மத்திய அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



## கியால்ஸ்ராஸ் இன் 2 வெண்கலச் சிலைகளானது ரஷ்யாவின் தலைநகரமான மாஸ்கோவில் நிறுவப்பட்டுள்ளன.

- பத்ம பூஷன் விருது பெற்ற மற்றும் மங்கோலியாவிற்கான முன்னாள் தூதரான கியால்ஸ்ராஸ் பகுலா ரின்போச்சே அவர்களின் இரண்டு வெண்கலச் சிலைகளானது ரஷ்யாவின் தலைநகரமான மாஸ்கோவில் நிறுவப்பட்டுள்ளதாக அந்நாட்டின் வெளியுறவு துறை அமைச்சகம் தெரிவித்வத்துள்ளது.
- இவர் முன்னாள் சோவியத் யூனியன் மற்றும் மங்கோலியாவில் பௌத்த மதத்தை புத்துயிர் பெற மேற்கொண்ட முயற்சிகளை போற்றும் விதமாக இந்த சிலைகள் அமைக்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மாஸ்கோவில் உள்ள புத்த கோவிலுக்குள் ஒரு 6 அடி உயர சிலையும் மைய நகரப் பூங்காவில் மற்றொரு 9 அடி சிலையும் இவர் நின்ற நிலையில் இருப்பது போன்று நிறுவப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்



## உலக சிங்க தினத்தை முன்னிட்டு சிங்கத்திற்கான புதிய கீதம் மற்றும் சின் சுச்னா என்ற இணைய செயலியானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- உலக சிங்க தினம் ஆகஸ்ட் 10 அன்று கொண்டாடப்படுவதை தொடர்ந்து குஜராத் மாநிலத்தில் அம்மாநில முதல்வர் சிங்கத்திற்கான புதிய கீதம் மற்றும் சின் சுச்னா என்ற இணைய மற்றும் கைபேசி செயலியை வெளியிட்டுள்ளார்.
- மேலும் இந்தியாவின் குஜராத்தின் கிர் தேசியப் பூங்காவானது உலகிலேயே ஆசிய சிங்கங்களின் ஒரே இயற்கை சரணாலயம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இங்கு வனத்துறை மற்றும் பொது மக்களின் சீரிய தொடர் முயற்சியைத் தொடர்ந்து, ஜூன் 2020 யின் நிலவரப்படி அங்கு உள்ள ஆசிய சிங்கங்களின் எண்ணிக்கையானது 674 ஆக உயர்ந்துள்ளது என்பது முக்கியத்துவமாக பார்க்கப்படுகிறது.

## வேளாண் தரவு மேலாண்மை கட்டமைப்பு

- தெலங்கானா மாநிலத்தின் தொழில்துறை அமைச்சரான கே ராமராவ், இந்தியாவின் முதல் வேளாண் தரவு மேலாண்மை கட்டமைப்பு(ADMF) மற்றும் வேளாண் தரவு பரிமாற்ற கட்டமைப்பானது(ADeX) அம்மாநில தலைநகரமான ஹைதராபாத்தில் தொடங்கி வைத்துள்ளார்.
- ADeX மற்றும் ADMF ஆகியவை மத்திய விவசாயத் துறைக்கான டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பாக(DPI) உருவாக்கப்பட்டுள்ளது என்றும் இவை மாநில அரசு-உலகப் பொருளாதார மன்றம்-இந்திய அறிவியல் கழகம் ஆகியவற்றின் கூட்டு ஒத்துழைப்பு என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- அரசு நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் போன்ற விவசாயத் தரவு வழங்குநர்களிடையே பாதுகாப்பான மற்றும் தரநிலை அடிப்படையிலான தரவு பரிமாற்ற மேலாண்மையை எளிதாக்குவதை நோக்கமாக கொண்டு இந்த அமைப்பானது மேற்கொள்ளப்பட்டுள்ளது

# 2023 ஆகஸ்ட் மாத வினா விடைகள்

1. உலகளாவிய வலைதள தினம் என்று அனுசரிக்கப்படுகிறது
   A. ஆகஸ்ட் 1
   B. ஆகஸ்ட் 2
   C. ஆகஸ்ட் 3
   D. ஆகஸ்ட் 4

2. உலகத் தாய்ப்பால் வாரம் எந்த ஆண்டில் இருந்து அனுசரிக்கப்படுகிறது?
   A. 1991
   B. 1992
   C. 1993
   D. 1994

3. முதல்வரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தில் பயன்பெற குடும்ப வருமானம் உச்ச வரம்பு என்ன?
   A. 25000
   B. 50000
   C. 75000
   D. 10000

4. கியால்ஸ்ராஸ் இன் சிலை எந்த நாட்டில் நிறுவப்பட்டது?
   A. உக்ரைன்
   B. இரஷ்யா
   C. மங்கோலியா
   D. இந்தியா

5. 'எனது மண், எனது தேசம்' இயக்கத்தின் நோக்கம் என்ன?
   A. போரில் வீர மரணம் அடைந்த வீரர்களை நினைவுக்கூறுதல்
   B. மண் வலம் காத்தல்
   C. இந்தியா சுதந்திர போராட்டத்தில் வீர மரணம் அடைந்த தியாகிகளை நினைவுக் கூறுதல்
   D. இந்தியாவின் பாரம்பரியத்தை எடுத்துரைத்தல்

6. தேசியகாகிததினம்என்றுஅனுசரிக்கப்படுகிறது?
   A. ஆகஸ்ட் 1
   B. ஆகஸ்ட் 2
   C. ஆகஸ்ட் 3
   D. ஆகஸ்ட் 4

7. லோகமான்ய திலக் தேசிய விருதானது 2023 ஆண்டில் யாருக்கு வழங்கப்பட்டது?
   A. மன்மோகன் சிங்
   B. சோனியா காந்தி
   C. நரேந்திர மோடி
   D. திரௌபதி முர்மு

8. குவாடர் துறைமுகம் எந்த நாட்டில் அமைந்துள்ளது?
   A. சீனா
   B. இந்தியா
   C. ஈரான்
   D. பாகிஸ்தான்

9. G-20யின் அதிகாரத்துவத்திற்கான உச்சி மாநாடு எங்கு நடைபெற்றது?
   A. அகமதாபாத்
   B. காந்திநகர்
   C. லக்னோ
   D. ஜம்மு மற்றும் காஷ்மீர்

10. திலகரின் நினைவு தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?
   A. ஆகஸ்ட் 1
   B. ஆகஸ்ட் 2
   C. ஆகஸ்ட் 3
   D. ஆகஸ்ட் 4

11. உலக பழங்குடியின மக்களின் சர்வதேச தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?
   A. ஆகஸ்ட் 8
   B. ஆகஸ்ட் 9
   C. ஆகஸ்ட் 10
   D. ஆகஸ்ட் 11

12. ஆகஸ்ட் கிராந்தி திவாஸ்/தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?
   A. ஆகஸ்ட் 8
   B. ஆகஸ்ட் 9
   C. ஆகஸ்ட் 10
   D. ஆகஸ்ட் 11

13. 'பார்த்திய வஸ்த்ரா ஏவம் ஷில்பா கோஷ் பற்றிய பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க

   1) ஜவுளி மற்றும் கைவினை பொருட்களை

மேம்படுத்தும் பொருட்டு உருவாக்கப்பட்டது

2) இந்த வலைத்தளமானது ஜவுளி மற்றும் கைவினைப் பொருட்கள் தொடர்பான ஆராய்ச்சிக் கட்டுரைகள், முனைவர் பட்ட ஆய்வறிக்கைகள், வழக்கு ஆய்வுகள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவற்றை தேவைப்படும் தொழில்முனைவோர்களுக்கு உதவும் வகையில் வலைத்தளமானது வடிவமைக்கப்பட்டுள்ளதாகும்.

மேற்கண்ட கூற்றுகளில் எது/ எவை சரியானவை/ சரியானது?

A. கூற்று 1 மட்டும் சரி

B. கூற்று 2 மட்டும் சரி

C. இரண்டு கூற்றுகளும் சரி

D. இரண்டு கூற்றுகளும் தவறு

14. தமிழகத்தின் சிறந்த மாநகராட்சியாக எது தேர்வு செய்யப்பட்டுள்ளது?

A. சென்னை

B. கோயம்புத்தூர்

C. திருச்சி

D. கரூர்

15. விபஜன் விபிஷிகா ஸ்மிருதி திவாஸ் ____ அன்று அனுசரிக்கப்படுகிறது

A. ஆகஸ்ட் 12

B. ஆகஸ்ட் 13

C. ஆகஸ்ட் 14

D. ஆகஸ்ட் 15

16. நவ்ரூஸ் பண்டிகை யாரால் கொண்டாடப்படுகிறது

A. இந்துக்கள்

B. முஸ்லிம்கள்

C. கிறிஸ்தவர்கள்

D. பார்சிகள்

17. தீரஜ் பொம்மதேவரா பின்வரும் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A. கால்பந்து

B. படப்பிடிப்பு

C. மட்டைப்பந்து

D. வில்வித்தை

18. 'நாஷா முக்த் பாரத் அபியான்' நோக்கம்

A. சிக்கன் குனியாவை ஒழித்தல்

B. காசநோயை ஒழித்தல்

C. மலேரியாவை ஒழித்தல்

D. HIV ஒழித்தல்

19. இந்தியாவின் முதல் ஆளில்லா வான்வழி வாகன சோதனை வசதி ____ இல் அமைக்கப்பட உள்ளது

A. தமிழ்நாடு

B. கேரளா

C. உத்தரப்பிரதேசம்

D. கர்நாடகா

20. PM விஸ்வகர்மா மேம்பாட்டுத் திட்டம் ____ ஐ ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது

A. சிறிய அளவிலான தொழில்கள்

B. நகர்ப்புற மற்றும் கிராமப்புற கைவினைஞர்

C. கிராமப்புற இளைஞர்கள்

D. பெண்கள் கல்வி

21. உலக கொசு நாள் ____ அன்று அனுசரிக்கப்படுகிறது

A. ஆகஸ்ட் 20

B. ஆகஸ்ட் 21

C. ஆகஸ்ட் 22

D. ஆகஸ்ட் 23

22. அக்ஷய் உர்ஜா திவாஸ் 2023 ___ அன்று அனுசரிக்கப்படுகிறது

A. ஆகஸ்ட் 19

B. ஆகஸ்ட் 20

C. ஆகஸ்ட் 21

D. ஆகஸ்ட் 22

23. FIDE உலகக் கோப்பையின் அரையிறுதிக்கு வந்த இரண்டாவது இந்தியர் ஆவார்.

A. குஹன்

B. ராணா பிரதாப்

C. ஆர் பிரக்ஞானந்தா

D. விஸ்வநாதன் ஆனந்த்

24. அக்ஷய் உர்ஜா திவாஸ் 2023 எந்த அமைச்சகத்தால்அனுசரிக்கப்பட்டது

A. நிதி அமைச்சகம்

B. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

C. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

D. சுற்றுச்சூழல் அமைச்சகம்

25. 20 அடி உயரத்தில் முற்றிலும் தமிழ் எழுத்துக்களால் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலையானது எங்கு அமைக்கப்பட உள்ளது?

A. கோவை

B. திருவண்ணாமலை

C. திருச்செந்தூர்

D. திருச்சிராப்பள்ளி

26. e-CAReவளைத்தலத்தின் நோக்கம்

A. வெளிநாட்டில் இறப்போர்களின் உடலை இந்தியா கொண்டு வருதல்

B. வயதானவர்களுக்கு உதவும் மையம்

C. கிராமப்புற இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் மையம்

D. மேற்கண்ட அனைத்தும் சரி

27. ஜன் விஸ்வாஸ் விதிமுறைகள் திருத்த மசோதா 2023 பற்றிய பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க

1) இது நாட்டின் பொது மக்கள் எளிமையாக வாழ்வதற்கும் எளிதாக வணிகம் செய்வதற்கும் உறுதி அளிக்கிறது

2) இது நம்பிக்கை அடிப்படையிலான நிர்வாகத்தை உறுதிப்படுத்தும்

மேற்கண்ட கூற்றுகளில் எது/ எவை சரியானவை/ சரியானது?

A. கூற்று 1 மட்டும் சரி

B. கூற்று 2 மட்டும் சரி

C. இரண்டு கூற்றுகளும் சரி

D. இரண்டு கூற்றுகளும் தவறு

28. 600 கிமீ தூரத்தில் உள்ள இலக்கை தாக்கும் ஏவுகணைகள் பொருத்தப்பட்ட புதிய கப்பல்களை உருவாக்கிய நாடு எது?

A. இந்தியா

B. ஈரான்

C. சீனா

D. இரஷ்யா

29. முதல் தனித்த முத்தரப்பு உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள உள்ள நாடுகளில் அல்லாதவை?

A. இந்தியா

B. அமெரிக்கா

C. ஜப்பான்

D. தென் கொரியா

30. 2023 ஆம் ஆண்டிற்கான 'தகைசால் தமிழர்' விருதானது யாருக்கு வழங்கப்பட்டது?

A. சுப வீரபாண்டியன்

B. என். சங்கரய்யா

C. கி.வீரமணி

D. நல்லக்கண்ணு

31. கிராம்பு நோய்க்குறி விழிப்புணர்வு தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

A. ஆகஸ்ட் 1

B. ஆகஸ்ட் 2

C. ஆகஸ்ட் 3

D. ஆகஸ்ட் 4

32. ஆதிச்சநல்லூர் முதலில் யாரால் தோண்டப்பட்டது?

A. டாக்டர் ஜாகோர்

B. அலெக்சாண்டர் ரியா

C. டாக்டர் சத்திய மூர்த்தி

D. அலெக்சாண்டர் கன்னிங்காம்

33. இந்திரதனுஷ் (ஐஎம்ஐ) 5.0 இன் நோக்கம் என்ன?

A. பெண்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல்

B. 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி வழங்குதல்

C. கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்

D. இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல்

34. கபில் சோனோவால் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A. ஹாக்கி

B. பளு தூக்குதல்

C. பேட்மிண்டன்

D. டென்னிஸ்

35. பின்வருபவர்களில் யார் சதுரங்க ஜாம்பவானான விஸ்வநாத ஆனந்தை பின்னுக்குத் தள்ளி, இந்தியாவின் முதல் தரவரிசை சதுரங்க விளையாட்டு வீரர் ஆனார்?

A. பிரஞ்யனந்தா

B. குகேஷ்

C. பரிமார்ஜன் நேகி

D. ஆர்யன் சோப்ரா

36. உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் தனிநபர் பிரிவில் உலக பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்ற அந்தஸ்தை பெற்றவர் யார்?

A. பர்னீத் கவுர்

B. ஜோதி சுரேகா

C. அதிதி

D. பிரியங்கா

37. குருதேவ் என அழைக்கப்பட்டவர் யார்?

A. அபிந்திரநாத் தாகூர்

B. இரவிந்திரநாத் தாகூர்

C. நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்

D. சுவாமி விவேகானந்தர்

38. ஹிரோஷிமா தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

A. ஆகஸ்ட் 4

B. ஆகஸ்ட் 5

C. ஆகஸ்ட் 6

D. ஆகஸ்ட் 7

39. தேசிய கைது தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

A. ஆகஸ்ட் 5

B. ஆகஸ்ட் 6

C. ஆகஸ்ட் 7

D. ஆகஸ்ட் 8

40. வெள்ளையனே வெளியேறு இயக்கம் நாள் என்று அனுசரிக்கப்படுகிறது?

A. ஆகஸ்ட் 6

B. ஆகஸ்ட் 7

C. ஆகஸ்ட் 8

D. ஆகஸ்ட் 9

41. நாகசாகி தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

A. ஆகஸ்ட் 6

B. ஆகஸ்ட் 7

C. ஆகஸ்ட் 8

D. ஆகஸ்ட் 9

42. உலக பழங்குடியின மக்களின் சர்வதேச தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

A. ஆகஸ்ட் 8

B. ஆகஸ்ட் 9

C. ஆகஸ்ட் 10

D. ஆகஸ்ட் 11

43. ஆகஸ்ட் கிராந்தி திவாஸ்/தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

A. ஆகஸ்ட் 8

B. ஆகஸ்ட் 9

C. ஆகஸ்ட் 10

D. ஆகஸ்ட் 11

44. 'பார்த்திய வஸ்த்ரா ஏவம் ஷில்பா கோஷ் பற்றிய பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொள்க

1) ஜவுளி மற்றும் கைவினை பொருட்களை மேம்படுத்தும் பொருட்டு உருவாக்கப்பட்டது

2) இந்த வலைத்தளமானது ஜவுளி மற்றும் கைவினைப் பொருட்கள் தொடர்பான ஆராய்ச்சிக் கட்டுரைகள், முனைவர் பட்ட ஆய்வறிக்கைகள், வழக்கு ஆய்வுகள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவற்றை தேவைப்படும் தொழில்முனைவோர்களுக்கு உதவும் வகையில் வலைத்தளமானது வடிவமைக்கப்பட்டுள்ளதாகும்.

மேற்கண்ட கூற்றுகளில் எது/ எவை சரியானவை/ சரியானது?

A. கூற்று 1 மட்டும் சரி

B. கூற்று 2 மட்டும் சரி

C. இரண்டு கூற்றுகளும் சரி

D. இரண்டு கூற்றுகளும் தவறு

45. இரவிந்திரநாத் தாகூர் எழுதிய பாடல் எந்த நாட்டின் தேசிய கீதமாக அங்கிகாரம் பெற்றது?

A. அமெரிக்கா

B. வங்கதேசம்

C. மலேசியா

D. மியான்மார்

46. கிரீஸ் சென்ற முதல் பிரதமர் யார்?

A. ஜவஹர்லால் நேரு

B. லால் பகதூர் சாஸ்திரி

C. அடல் பிகாரி வாஜ்பாய்

D. நரேந்திர மோடி

47. உலக உயிரி எரிபொருள் தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

A. ஆகஸ்ட் 10

B. ஆகஸ்ட் 11

C. ஆகஸ்ட் 12

D. ஆகஸ்ட் 13

48. சர்வதேச இளைஞர் என்று அனுசரிக்கப்படுகிறது?

A. ஆகஸ்ட் 10

B. ஆகஸ்ட் 11

C. ஆகஸ்ட் 12

D. ஆகஸ்ட் 13

49. இந்தியாவின் தேசிய பாரம்பரிய விலங்காக யானை எந்த ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளது?

A. 2008

B. 2009

C. 2010

D. 2011

50. மனித உடல் உறுப்பு தானத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை உலக பொது மக்களுக்கு ஏற்படுத்தவும், உடல் உறுப்பு தானம் தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

A. ஆகஸ்ட் 10

B. ஆகஸ்ட் 11

C. ஆகஸ்ட் 12

D. ஆகஸ்ட் 13

51. 1947ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிவினையின் போது ஏற்பட்ட கடும் போராட்டங்கள் மற்றும் உயிர் தியாகங்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் இந்தியாவில் _____ ஐ பிரிவினை பயங்கர நினைவு தினமாக அனுசரிக்கப்படுகிறது.

A. ஆகஸ்ட் 11

B. ஆகஸ்ட் 12

C. ஆகஸ்ட் 13

D. ஆகஸ்ட் 14

52. உலக மனிதாபிமான தினம் எந்த ஆண்டு முதல் அனுசரிக்கப்படுகிறது?

A. 2007

B. 2008

C. 2009

D. 2010

53. உலக புகைப்பட தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

A. ஆகஸ்ட் 17

B. ஆகஸ்ட் 18

C. ஆகஸ்ட் 19

D. ஆகஸ்ட் 20

54. கொசுவால் பரவக்கூடிய நோய்களில் ஒன்று?

A. போலியோ

B. காசநோய்

C. மஞ்சள் காமாலை

D. மலேரியா

55. அக்ஷய் உர்ஜா திவாஸ் என்று அனுசரிக்கப்படுகிறது?

A. ஆகஸ்ட் 17

B. ஆகஸ்ட் 18

C. ஆகஸ்ட் 19

D. ஆகஸ்ட் 20

56. எந்த ஆண்டு மெட்ராஸ் மாநகரம் நிறுவப்பட்டது?

A. 1638

B. 1639

C. 1630

D. 1700

57. எந்த ஆண்டு முதல் மெட்ராஸ் தினம் அனுசரிக்கப்படுகிறது?

A. 2001

B. 2002

C. 2003

D. 2004

58. கருப்பு ரிப்பன் தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

A. ஆகஸ்ட் 22

B. ஆகஸ்ட் 23

C. ஆகஸ்ட் 24

D. ஆகஸ்ட் 25

59. கோப்பர்நிக்கஸ் காலநிலை மாற்ற மன்றம் எந்த நிறுவனத்துடன் தொடர்புடையது?

A. ஐக்கிய நாடுகள் சபை

B. ஐரோப்பிய ஒன்றியம்

C. உலக வங்கி

D. உலக வர்த்தக மையம்

60. நிலவில் தென் துருவத்தில் soft Landing மூலம் ரோவரை தரை இறங்கிய முதல் நாடு எது?

A. சீனா

B. இந்தியா

C. அமெரிக்கா

D. ஜப்பான்

61. தாவர உண்ணி வகையை சேர்ந்த டைனோசரின் பழமையான புதைபடிவங்கள் ____ மாநிலத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

A. ராஜஸ்தான்

B. மத்திய பிரதேசம்

C. ஆந்திர பிரதேசம்

D. கேரளா

62. லூனா 25 எந்த நாட்டின் மூலம் நிலவிற்கு செலுத்தப்பட்டது?

A. சீனா

B. அமெரிக்கா

C. இரஷ்யா

D. பிரிட்டன்

63. சிவசக்தி புள்ளி எதனுடன் தொடர்புடையது?

A. மங்கல்யான்

B. சந்திராயன் 1

C. சந்திராயன் 2

D. சந்திராயன் 3

64. தமிழகத்தின் சிறந்த மாநகராட்சியாக "____" தேர்வு செய்யப்பட்டுள்ளது.

A. கோவை

B. திருச்சி

C. சென்னை

D. காஞ்சிபுரம்

65. கடம்-பகத் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A. டென்னிஸ்

B. கிரிக்கெட்

C. பளு தூக்குதல்

D. பேட்மிண்டன்

66. மோகித் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A. பளு தூக்குதல்

B. மல்யுத்தம்

C. டென்னிஸ்

D. பேட்மிண்டன்

67. 2023 ஆம் ஆண்டிற்கான சதுரங்க உலகக் கோப்பையில் வெள்ளி பதக்கம் வென்றவர்?

A. குகேஷ்

B. மேக்னஸ் கார்ல்சன்

C. ஆர். பிரக்ஞானந்தா

D. விஸ்வநாதன் ஆனந்த்

68. 2023 ஆம் ஆண்டிற்கான தேசிய சதுரங்க சாம்பியன்ஷிப்பை வென்றவர் யார்?

A. மேக்னஸ் கார்ல்சன்

B. ஆர். பிரக்ஞானந்தா

C. விஸ்வநாதன் ஆனந்த்

D. எஸ்.பி.சேதுராமன்

69. 2023 ஆம் ஆண்டிற்கான உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் தங்க பதக்கம் வென்றவர் யார்?

A. நீரஜ் சோப்ரா

B. ஹெச்.எஸ்.பிரணாய்

C. பிரியா மாலிக்

D. எஸ்.பி.சேதுராமன்

70. பிரியா மாலிக் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A. பளு தூக்குதல்

B. மல்யுத்தம்

C. பேட்மிண்டன்

D. டென்னிஸ்

71. மலபார் கூட்டு பயிற்சியில் இடமா பெற்ற நாடுகள்?

1) இந்தியா

2) ஜப்பான்

3) ஆஸ்திரேலியா

A. 1 &2 மட்டும்

B. 2 & 3 மட்டும்

C. 1& 3 மட்டும்

D. 1,2&3

72. ஐஎன்எஸ் விந்தியகிரி ஒரு

A. இராணுவ டிரக்

B. போர்கப்பல்

C. ஏவுகணை தாங்கும் கப்பல்

D. நீர்மூழ்கி கப்பல்

73. BRIGHT STAR-23 இராணுவ பயிற்சி இந்தியா மற்றும் ____ இடையே நடைபெற்றது

A. சவுதி அரேபியா

B. எகிப்து

C. மியான்மார்

D. ஜப்பான்

74. கியால்ஸ்ராஸ் பகுலா ரின்போச் சிலை எங்கு அமைக்கப்பட்டுள்ளது?

A. மாஸ்கோ

B. புது தில்லி

C. மும்பை

D. சென்னை

75. உலக சிங்க தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

A. ஆகஸ்ட் 8

B. ஆகஸ்ட் 9

C. ஆகஸ்ட் 10

D. ஆகஸ்ட் 11

76. உலக சிங்க தினத்தை முன்னிட்டு சிங்கத்திற்கான புதிய கீதம் வெளியிடப்பட்ட மாநிலம் எது?

A. இராஜஸ்தான்

B. குஜராத்

C. மத்திய பிரதேசம்

D. மகாராஷ்டிரா

77. வேளாண் தரவு மேலாண்மை கட்டமைப்பு எந்த மாநிலத்தில் தொடங்கப்பட்டது?

A. ஆந்திர பிரதேசம்

B. தெலுங்கானா

C. தமிழ் நாடு

D. கேரளா

78. கிரீஸ் நாடு எந்த கண்டத்தில் உள்ளது?

A. ஆசியா

B. ஐரோப்பிய

C. ஆப்பிரிக்க

D. அமெரிக்கா

79. ரேசா மியா விற்கு எந்த நாட்டின் உயரிய விருது வழங்கப்பட்டது?

A. தென் கொரியா

B. தென் அமெரிக்கா

C. தென் ஆப்ரிக்கா

D. இந்தியா

80. டாக்டர் வலியுர் ரஹ்மான் எந்த விருது வழங்கப்பட்டது?

A. தேசிய புல்லியியல்

B. தேசிய புவி அறிவியல்

C. தேசிய கணக்காளர்கள்

D. தேசிய ஆடை வடிவமைப்பாளர்

81. இந்தியாவின் முதல் அதிநவீன 3D அஞ்சல் அலுவலகமானது ___ தொடங்கப்பட்டுள்ளது.

A. கர்நாடகா

B. கேரளா

C. தமிழ் நாடு

D. மத்திய பிரதேசம்

82. சிறந்த படத்திற்கான தேசிய விருது பெற்ற திரைப்படம்?

A. ராக்கெட்ரி

B. பரியேறும் பெருமாள்

C. புஷ்பா

D. கோதாவரி

83. இந்திய ஸ்மார்ட் சிட்டி போட்டியில் சூழலுக்கான விருது பெற்ற நகரம்?

A. திருவண்ணாமலை

B. திருச்சிராப்பள்ளி

C. கோயம்புத்தூர்

D. திருநெல்வேலி

84. இந்திய ஸ்மார்ட் சிட்டி போட்டியில் கலாச்சாரத்திற்கான விருது பெற்ற நகரம்?

A. அகமதாபாத்

B. மும்பை

C. காந்திநகர்

D. லக்னோ

85. இந்திய ஸ்மார்ட் சிட்டி போட்டியில் பொருளாதாரத்திற்கான விருது பெற்ற நகரம் எது?

A. புது தில்லி

B. இந்தூர்

C. கல்கத்தா

D. சென்னை

86. திங்க் 20 உச்சி(ஜி 20) எங்கு நடைபெற்றது?

A. புது தில்லி

B. கல்கத்தா

C. கர்நாடகா

D. தமிழ் நாடு



SIVARAJAVEL IAS ACADEMY

87. இந்தியாவின் தலைமையின் கீழ், G20யின் அதிகாரத்துவத்திற்கான (EMPOWER) உச்சி மாநாடானது ___ இல் நடைப்பெற்றது.

A. கர்நாடகா

B. குஜராத்

C. மத்திய பிரதேசம்

D. மகாராஷ்டிரா

88. தேசிய விண்வெளி கண்டுபிடிப்பு சவால் 2023" நடத்தும் நிறுவனம் எது?

A. இஸ்ரோ

B. நிதி ஆயோக்

C. உள்துறை அமைச்சகம்

D. பாதுகாப்பு துறை அமைச்சகம்

89. குற்றவியல் நடைமுறைச் சட்டம் எந்த ஆண்டு நிறுவப்பட்டது?

A. 1953

B. 1963

C. 1973

D. 1984

90. இந்தியாவில் பிரிவினை பயங்கர நினைவு தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

A. ஆகஸ்ட் 12

B. ஆகஸ்ட் 13

C. ஆகஸ்ட் 14

D. ஆகஸ்ட் 15

91. நாட்டின் மிகப்பெரிய – புதிய தகவல் தொழில்நுட்ப மையத்தை ___இல் உருவாக்க திட்டம்.

A. லக்னோ

B. காந்திநகர்

C. சென்னை

D. பெங்களூரு

92. அறிவார்ந்த மாபெரும் தேசிய ஊடக மாநாடு 2023 ஆனது ___ இல் நடைபெற்றது

A. புது தில்லியில்

B. கொல்கத்தா

C. மும்பை

D. ஹைதராபாத்

93. இந்திய-யூத கலாச்சார மதிப்புமிக்க சதுக்கம்(அரங்கம்) எங்கு திறக்கப்பட்டுள்ளது?

A. இஸ்ரேல்

B. ஈரான்

C. ஈரான்

D. எகிப்து

94. G20 உச்சி மாநாடானது எங்கு நடைபெற்றது?

A. சென்னை

B. பெங்களூரு

C. புதுதில்லி

D. கல்கத்தா

## Answers:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 21 | A | 41 | D | 61 | A | 81 | B |
| 2 | B | 22 | B | 42 | B | 62 | C | 82 | A |
| 3 | C | 23 | C | 43 | B | 63 | D | 83 | A |
| 4 | B | 24 | C | 44 | C | 64 | D | 84 | C |
| 5 | A | 25 | A | 45 | B | 65 | B | 85 | A |
| 6 | A | 26 | A | 46 | D | 66 | D | 86 | B |
| 7 | C | 27 | C | 47 | A | 67 | B | 87 | C |
| 8 | D | 28 | B | 48 | C | 68 | C | 88 | B |
| 9 | B | 29 | A | 49 | C | 69 | D | 89 | A |
| 10 | A | 30 | C | 50 | D | 70 | A | 90 | C |
| 11 | B | 31 | C | 51 | D | 71 | B | 91 | C |
| 12 | C | 32 | A | 52 | C | 72 | D | 92 | A |
| 13 | C | 33 | B | 53 | C | 73 | B | 93 | A |
| 14 | C | 34 | B | 54 | D | 74 | B | 94 | A |
| 15 | D | 35 | B | 55 | D | 75 | A | 95 | |
| 16 | D | 36 | C | 56 | B | 76 | C | 96 | |
| 17 | B | 37 | B | 57 | D | 77 | B | 97 | |
| 18 | B | 38 | C | 58 | B | 78 | B | 98 | |
| 19 | A | 39 | C | 59 | B | 79 | B | 99 | |
| 20 | B | 40 | C | 60 | b | 80 | C | 100 | |